இனி இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 21

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை 12.04.2020 கதிர் 158


கொரோனா பேரிடருக்கு மத்தியில் – அந்தக் சிக்கலைத் தீர்ப்பதற்கு இடையில் – பொதுத் தேர்தலையும் நடத்த முயற்சிக்கும் ஆளும் தரப்பின் போக்குக்கு எதிராக சில தரப்புகள் நீதிமன்றத்துக்குப் போவது குறித்து சிந்திக்கின்றன என்று தகவல்.

பக்கம் 02 »

# புதுவருடப் பிறப்பன்று ஊரடங்கு நீக்கப்படாது

## 19 மாவட்டங்களில் வியாழனன்றே தற்காலிக தளர்வு

கொழும்பு, ஏப்ரல்.12

தற்போது நாடு முழுவதும் நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் நாளை புதுவருடத்தன்றும் நீக்கப்படமாட்டாது. முக்கிய ஆறு மாவட்டங்கள் தவிர்ந்த 19 மாவட்டங்களில் நாளை மறுதினம் ஊரடங்கு நீக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், அதுவும் கூட இப்போது மேலும் இரண்டு நாள்கள் கழித்தே – இனி வியாழனன்றே – விலக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 02 »

## லண்டனில் கொரோனாவால் மயிலிட்டி இளைஞர் மரணம்

லண்டன், ஏப் 12

புலம்பெயர்ந்து லண்டனில் அரசியல் தஞ்சம் கோரியிருந்த யாழ்ப்பாணம், மயிலிட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகரத்தினம் ஜீவிதன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒரு கிழமைக்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான அவருக்கு, லண்டனில்

பக்கம் 02 »

## பல்கலைகள் ஆரம்பிக்கும் திகதி ஆலோசித்த பின்பே முடிவாகும்

கொழும்பு, ஏப்.12

பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் நாட்டில் நிலமைகளை ஆராய்ந்து உரிய ஆலோசனைகள் பெறப்பட்டதன் பின்னரே திகதி அறிவிக்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த மார்ச் 13ஆம் திகதியுடன் கற்றல் நடவடிக்கைகள் உள்பட அனைத்துப் பணிகளையும் இடைநிறுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன.

பக்கம் 02 »

## யாழில் ஊரடங்கு தளர்த்தப்படலாம்

### இப்படிக் கணிக்கிறார் டாக்டர் சத்தியமூர்த்தி

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணத்தில் தற்போது இருக்கின்றவாறு மேலதிகமாக எந்தவொரு கொரோனா நோயாளிகளும் இனம்

பக்கம் 02 »

## ஏப்.20க்குப் பின் ஊரடங்கு பகுதி பகுதியாகத் தளரும்!



கொழும்பு, ஏப். 13

தற்போது மேற்கொள்ளப்படும் சுகாதார பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் இதேவிதத்திலேயே முன்னெடுக்கப்பட்டால், எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின் ஊரடங்குச் சட்டத்தை பகுதி பகுதியாக நீக்குவது குறித்து அரசு கவனம் செலுத்தும் என்று அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவர்

பக்கம் 02 »

## ஜா எலவில் 52 பேரை பிடித்தது கடற்படை!

கொழும்பு, ஏப். 12

ஜா எல பகுதியில் 52 பேரை நேற்று தேடிப்பிடித்த கடற்படை அவர்களைத் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக நேற்று முன் தினம் அடையாளம் காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்களே இவ்வாறு தேடிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

பக்கம் 02 »

## மருத்துவர்களுக்கு மரியாதை செய்து நேற்றிரவு ஒளிர்ந்த தாமரைக் கோபுரம்



கொழும்பு, ஏப். 12

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடும் மருத்துவர்கள், மருத்துவத் துறையினர் மற்றும் சுகாதாரத்

பக்கம் 02 »

## 198 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை 198 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் மேலும் 8 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 02 »

## மே 11 ஆம் திகதியன்றே பாடசாலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 12

அனைத்துப் பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் மே 11ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னர் ஏப்ரல் 20ஆம் திகதி இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரம்பல் காரணமாக முதலாம் தவணை விடுமுறை மே 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

பாடசாலை

பக்கம் 02 »

## யாழ்.முனியப்பர் கோவிலின் தொண்டரான முதியவர் சாவு

### அடையாளம் காணுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்ப்பாணம் முற்றவெளியில் முனியப்பர் ஆலயத்தில் தொண்டாற்றிய வந்த முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக ஆலயத்தில் தொண்டு செய்து தமது வாழ்வை முற்றவெளிப் பகுதியில் கழித்து வந்த முதியவர் நேற்று உயிரிழந்துள்ளார். சட்ட மருத்துவ அதிகாரியின் முன்னிலையில் இடம்பெறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே அவரது உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் உறுதியாகக் கூற முடியும் என்று இறப்பு விசாரணையில்

பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்த விடயத்தில் அவை மிக நிதானமாகவும், கவனமாகவும்தான் அடியெடுத்து வைக்க எண்ணுகின்றன.

நீதியை நிலைநாட்டும் தமது எத்தனம் குறித்து ஆளும் தரப்பு மக்கள் மத்தியில் தவறான அர்த்தத்தைக் கொடுத்து பிழையான கற்பித்தலை ஏற்படுத்தி விடலாம் என அவை அஞ்சுகின்றன என்று தெரிகின்றது.

இந்த நெருக்கடி சமயத்தில் எப்படித் தேர்தல் நடத்தலாம் என்று நீதிமன்றுக்குப் போனால், இவர்கள் தேர்தல்களுக்குப் பயந்தவர்கள், மக்கள் தமது தீர்ப்பை அளிப்பதற்கான வாய்ப்புகளுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள் என அர்த்தப்படுத்தி விளக்கம் – வியாக்கியானம் – கொடுத்து விடுவார்களோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

நாட்டில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஊரடங்கே தவறு, அது சட்ட ரீதியானது அல்ல என்று உத்தரவிடக் கோரி வழக்குப் போட்டால், கொரோனா பேரிடரைச் சமாளிக்கும் ஒரே மார்க்கத்துக்கும் ஆப்பு வைக்கப் பார்க்கின்றார்கள், அதன்மூலம் தேசியப் பேரிடரைப் பெருங்கொடூரமாகக் முயலுகின்றார்கள் என்று பிரசாரம் செய்து விடுவார்கள் எனப் பயப்பட வேண்டியுள்ளது.

அதேபோல, முன்னைய அரசு ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலத்துக்குரிய இடைக்கால வரவு – செலவு அறிக்கை ஒன்றையே சமர்ப்பித்து அங்கீகரித்திருக் கின்றது. அதற்குப்பின்னரான காலத்துக்கு வரவு – செலவுத் திட்டம் ஏதும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.

இந்நிலையில் ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் இந்த அரசு நிதி செலவீனங்களைக் கையாள முடியாது என வழக்குப் போட்டு உத்தரவு எடுக்கலாம் என்றால், கொரோனாப் பேரிடருக்கு எதிராக அரசும், நாடும் போராடி வருகையில் நாட்டை நிதியியல் ரீதியாக ஸ்தம்பிக்கச் செய்து கொரோனாப் பேரிடருக்கு எதிராகப் போராட விடாமல் தடுத்து, நாட்டையே அழிக்க முயலுகின்றனர் என ஆளும் தரப்பு மக்கள் மத்தியில் அர்த்தம் கற்பித்து விடும் என்று கலக்கமுற வேண்டியுள்ளது.

ஆனால் இந்த மூன்று விடயங்களிலும் வழக்குத் தொடர்ந்தால் அரசுக்கு எதிரான காட்டமான உத்தரவுகளை உயர்நீதிமன்றத்திடம் பெறக்கூடிய சட்ட வாய்ப்புகள் மிகப் பிரகாசமானவையாக இருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

எது, எப்படி என்றாலும் – 'செல்லும் செல்லாததற்கெல்லாம் செட்டியார்' – என்பது போல – இந்த வழக்குகளுக்கான முஸ்தீபுகளில் இறங்கியுள்ளோர் வழமை போல ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனோடு பேச விழைகின்றனர் என்று அறியவந்தது.

சுமந்திரனிடம் இது குறித்துக் கேட்டேன்.

*“ஆம் நீதிமன்றத்தில் வழக்குப் போட விரும்பினால் – முடிவு செய்தால் – வழக்குப் போடலாம் அதில் எந்தக் குழப்பமும் இல்லை.*

*“ஊரடங்கு நடைமுறையில் இருந்தாலும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை eFiling மூலம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். ஆனால் இதுவரை அப்படி எந்த முடிவும் – எந்தத் தரப்பும் – எடுக்கவில்லை. தேவைப்பட்டால் நீதிமன்றத்தை நாடமுடியும். நீங்கள் சுட்டிக்காட்டும் மூன்று விடயங்களிலும் ஆழமான சட்ட அடிப்படைகள் உள்ளன”* – என்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

கோட்டாபயவின் அரசு அரசியல் ரீதியாக எடுக்கப்போகும் தீர்மானங்கள் உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படும் சாத்தியங்கள் அதிகமாக உள்ளன என்பதே இன்றைய நிலைவரமாகும்.

–மின்னல்–

## யாழில் ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படாத நிலையில் அரசு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 7 கொரோனா நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் முதலாவதாக இனங்காணப்பட்ட தாவடியைச் சேர்ந்த நோயாளி தற்போது உடல் நலம் தேறி வந்துள்ளமையுடன் அவர் மிக விரைவில் வீடுதிரும்ப உள்ளார் என்று கூறப்படுகின்றது. மிகுதி நோயாளிகளின் உடல்நிலையிலும் முன்னேற்றம் உள்ளது.

கடந்த சில நாள்களாக எமது மாவட்டத்தில் எந்த ஒரு கொரோனா நோயாளிகளும் இனம் காணப்படவில்லை. இது நமக்கு ஒரு ஆரோக்கியமான விடயம்.

யாழ்ப்பாணத்தில் தற்போது இருக்கின்ற சூழ்நிலையைப் போல இன்னும் சில தினங்களுக்கு இருக்குமாயின் மத்திய சுகாதார அமைச்சும் இலங்கை அரசும் இணைந்து யாழ்ப்பாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தில் தளர்வுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று நம்புகின்றேன்.

தற்போது இருக்கின்ற நிலைமை இன்னும் சில நாள்களுக்கு தொடருமானால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தச் சாத்தியங்கள் இருப்பதாக நம்புகிறேன் – என்றார்.

## புதுவருடப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் தவிர்த்து நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு ஏப்ரல் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அத்துடன், காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் அதே நாளில் மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 19 மாவட்டங்களிலும் ஊரடங்கு இதேபோன்று தளர்த்தப்படும் என்றி முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பு மீளப்பெறப்பட்டு வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமையே ஊரடங்கு தளர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கொரோனா தொற்று பரவலைக் கவனத்திற்கொள்ளும்போது இடர் வலயங்களாக இனம்காணப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் ஏப்ரல் 16 காலை 6 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் 16ஆம் திகதி காலை 06 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் ஏப்ரல் 14 செவ்வாய் காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு அன்றைய தினம் மாலை 4 மணி முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் தற்போது அது மாற்றப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக பிரப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படும் இடர்களை புரிந்துணர்வுடனும் பொறுப்புடனும் பொறுத்துக் கொள்ளுமாறு அரசு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

பொருள்களைக் கொள்வனவு செய்வது அத்தியாவசியப் பொருள்களுடன் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் புத்தாண்டு காலப்பகுதியில் சம்பிரதாயங்கள் மற்றும் தொடர்புகளைக் குடும்ப உறுப்பினர்களுடன் மட்டுமே மட்டுப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் வேறு பொருள்களை வீடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்களை மேற்கொள்ள அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

எந்த மாவட்டத்திலாயினும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள், ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்படும்.

எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது – என்றுள்ளது.

## மருத்துவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறையினருக்கு மரியாதை செலுத்தும் வகையில் கொழும்பு தாமரைக் கோபுரத்தில் மின் விளக்குகள் ஒளிர விடப்பட்டுள்ளன.

கோரோனா பரவலைக் கட்டுப்படுத்த உழைக்கும் முப்படையினர், பொலிஸார் என அனைவருக்கும் மரியாதை செலுத்துவதற்காக தாமரைக் கோபுரம் ஒளிரவிடப்பட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் இவ்வாறு தாமரைக் கோபுரம் ஒளிரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதை தவிர்ப்பதற்கு தமது உயிரை பணயம் வைத்து இரவு பகல் பாராது முன்னின்று செயற்பட்டு வரும் அனைவருக்கும் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நேற்று பிற்பகல் 6.45 மணிக்கு தாமரை கோபுரம் ஒளியூட்டப்பட்டு கௌரவமளிக்கப்பட்டது.

சவாலான சந்தர்ப்பத்தில் அனைத்து மக்கள் மத்தியிலும் தைரியத்தை ஏற்படுத்தி, முழு உலகிற்கும் முன்னுதாரணமாக மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதார ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் அனைத்து பாதுகாப்பு தரப்பினர், அரச நிர்வாக பொறிமுறைக்குட்பட்ட அனைத்து அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய பல ஊழியர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அனைவருக்கும் மக்களினதும் நாட்டினதும் கௌரவம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது – என்றுள்ளது.

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்துள்ளது.

கடுமையான மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து செயற்கைச் சுவாசம் கொடுக்கப்பட்டிருந்தது. இரு தினங்களுக்கு முன்பாக அவரது உடல் நிலையில் முன்னேற்றம் இருப்பதாக மருத்துவமனை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுச் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

லண்டனுக்கு அகதி தஞ்சம் கோரி சென்று பத்து ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையில் இன்னும் அவரது அகதிக் கோரிக்கை ஏற்கப்படாத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். அவரது குடும்பத்தினர் பருத்தித்துறையில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் பாடசாலைகள் வரும் மே 11ஆம் திகதி இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கும் உரிய ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே தீர்மானிக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2020- 2021 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைப்பதற்கான இணைய வழி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளாக மே 25ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 198 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனடிப்படையில், நாட்டில் கொரோனா தொற்றுறுதியானோர் எண்ணிக்கை 198 ஆக அதிகரித்துள்ளது.

## ஜா எலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

41 ஆண்கள் 5 பெண்கள் 6 சிறுவர்கள் இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். மாக்கோவிட்ட பகுதியில் மேலும் பலரைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

## யாழ்.முனியப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

66 வயது மதிக்கத்தக்க வெள்ளை முடியுகொண்ட முதியவரே சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அவர் அடையாளம் காணப்படவில்லை. அதனால் உறவினர்கள் யாராவது இருப்பின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

முதியவரின் சடலம் நேற்று மாலை கண்டறியப்பட்டது. அவரை அடையாளம் காணமுடியவில்லை என்று பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

முதியவரின் இறப்பு விசாரணையை முன்னெடுக்க திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமாருக்குக் கட்டளை வழங்கிய நீதிவான், விசாரணை அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்க உத்தரவிட்டார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், நேற்று மாலை இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை குறிப்பிட்ட நாள்களுக்குள் எவரும் உரிமை கோராதவிடத்து அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் முனியப்பர் கோவிலடியில் வாழ்விடங்களை இழந்து 9 பேர் இருக் கின்றனர். அவர்களில் இந்த முதியவரும் ஒருவர். முதியவர் ஆஸ்துமா காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சை சென்று வந்தார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சனின் ஏற்பாட்டில் முனியப்பர் கோவிலடியில் உள்ள அனைவருக்கும் யாழ்ப்பாணம் நகரில் இயங்கும் ஹோட்டல்கள் இரண்டினால் சுழற்சி முறையில் இலவச உணவு கடந்த 20 நாள்களாக வழங்கப்பட்டு வந்தது என்று பிரிவுக்குப் பொறுப்பான கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டது.

## மே 11 ஆம் திகதியன்றே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் தவணை மே 11 திங்கள் ஆரம்பமாகும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பாடசாலை இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 20 திங்கள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கொரோனா வைரஸ் பரவுவதுடன் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்னெடுத்துள்ள செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து பாடசாலைப் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக இவ்வாறு பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நடைபெறாத காலப்பகுதியில் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொலைக் கல்வி வசதிகளை முடியுமானளவு வழங்க அரசு திட்டமிட்டுள்ளது – என்றுள்ளது.

## ஏப்.20க்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் கொரோனா வைரஸ் காரணமாக அதிக பாதிப்பான நிலைமையை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்தில் தங்கியிருக்கும் வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு புத்தாண்டுக்கு ஊர்களுக்குச் செல்லச் சந்தர்ப்பம் வழங்கினால், எதிர்வரும் 20ஆம் திகதிக்கு பின்னர் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தச் சந்தர்ப்பம் கிடைக்காது . மேல் மாகாணத்தில் தங்கியிருக்கும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் புத்தாண்டுக்கு தமது ஊர்களுக்குச் செல்ல அரசிடம் போக்குவரத்து வசதிகளைக் கோரியுள்ளனர் .

எனினும் நிலவும் நிலைமைக்கு அமைய இவர்கள் கொழும்பில் இருந்து வெளியேறினால், கொரோனா வைரஸ் சில விதத்தில் பரவக்கூடும். அப்படி நடந்தால், கிராமங்கள் முழுவதும் பரவி விடும் எனவும் சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர் எனவும் பஸில் ராஜபக்ஷ மேலும் கூறினார்.

# 76 மதுபான விற்பனை நிலையங்களுக்கு ஹட்டனில் அதிகாரிகள் 'சீல்' வைத்தனர்



ஹட்டன் மதுவரி திணைக்கள அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியிலுள்ள சுமார் 76 மதுபான விற்பனை நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் மதுவரி திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ஐ.ஜே.ஏ.பெரேரா தெரிவித்தார்.

ஹட்டன் பொகவந்தலாவை மஸ்கெலியா, கொட்டகலை, தலவாக்கலை, பத்தனை, டயகம, அக்கரபத்தனை உள்ளிட்ட ஹட்டன் பிரதேசத்தை உள்ளடக்கிய நகரங்களில் உள்ள மதுபானசாலைகளுக்கே இவ்வாறு காலவரையரையின்றி சீல் வைக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவியதனை தொடர்ந்து கடந்த 20ஆம் திகதி முதல் மதுபானசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் புதுவருடம் மற்றும் கொரோனா அச்சுறுத்தலினை கருத்தில் கொண்டு நிலைமை சீரடையும் வரை மதுபானங்களை மக்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்வதற்காக இந்த மதுபான சாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி முதல் இந்த சீல் வைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நேற்று 18 மதுபான விற்பனை நிலையங்கள் சீல் வைக்கப்பட்டதனை தொடர்ந்து மொத்தம் 76 மதுபான விற்பனை நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் மீள ஆரம்பிக்கப்பட மக்கள் எதிர்ப்பு

மன்னார் – தலை மன்னார் பிரதான வீதி, நடுக்குடா பகுதியில் இதுவரை இடம்பெற்ற காற்றாலை மின்சக்தி உற்பத்தி வேலைத் திட்டங்கள் இடை நிறுத்தப்பட்ட நிலையில் அங்கு இன்று அதிகாலை கனரக வாகனங்களில் மீண்டும் பொருள்கள் கொண்டு வரப்பட்டன. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் இன்று காலை வீதியில் இறங்கி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த வேலைத்திட்டம் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை காரணமாக தற்காலிகமாக இடை



நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இன்று அதிகாலை மின்சக்தி உற்பத்தி திட்ட கட்டுமானப்பணிக்கு தேவையான உதிரிப்பாகங்கள் பல கனரக வாகனங்களில் நடுக்குடா பகுதிக்கு கொண்டு வரப்பட்டன. பொருள்களைக் கொண்டு வந்த சுமார் 15 கும் மேற்பட்டவர்கள் அந்தப் பகுதியில் நடமாடித் திரிந்துள்ளனர்.

இதனை அவதானித்த மக்கள் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு வருவதை தடுக்கக்கோரி இன்று காலை அப்பகுதியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் சம்பவ இடத்திற்கு வந்து பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளமையினால் வீதியில் மக்களை ஒன்று கூட வேண்டாம் எனவும், உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துமாறும் கோரினர்., எவ்வித நடவடிக்கையும் அங்கு இடம் பெறாது என அவர்கள் மக்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் அந்தப் பகுதிக்கு வருகை தந்து மக்களின் கருத்துக்களை கேட்டு அறிந்து கொண்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தின் போது இந்த வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது. எதிர்வரும் சித்திரை புத்தாண்டின் பின்னர் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது என அப்போது தீர்மானிக்கப்பட்டதாம்.

எனினும் மக்களைப் பாதிக்கின்ற வகையில் தவறாக முன்னெடுக்கப்படுகின்ற எந்த ஒரு வேலைத்திட்டத்திற்கும் அனுமதி வழங்க மாட்டோம் என பிரதேச செயலாளர் மக்களிடம் தெரிவித்தார்.

இந்த நிலையில் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக மக்கள் அங்கிருந்து சென்றனர்.

## மகரகம வைத்தியசாலையின் பணிப்பாளரான டாக்டர் மருத்துவ தர்மத்தையே மீறி விட்டார் எனக் குற்றசாட்டு

### சுகாதார அமைச்சு, மருத்துவ சபைக்கு முறைப்பாடுகள் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் தெரிவிப்பு

சமூக வலைத்தளங்களில் இனவெறுப்பும் குரோதமும் ஏற்படும் விதத்திலான பதிவுகளை வெளியிட்டு, மருத்துவ தர்மத்தை மீறிய மகரகம அபேக்ஷா மருத்துவமனையின் பணிப்பாளர் டாக்டர் வசந்த திசாநாயக்கவுக்கு எதிராக இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை மருத்துவ சபையில் முறைப்பாடுகளைச் செய்துள்ளது.

மகரகம அபேக்ஷா மருத்துவமனையின் பணிப்பாளர் டாக்டர் வசந்த திசாநாயக்க 'முஸ்லிம் ஒருவர் கொரோனா நோயறிகுறிகளை மறைத்துக் கொண்டு அபேக்ஷா மருத்துவமனைக்கு உள்நுழைய முயற்சித்தார். இவ்வாறான நடமாடும் வெடிகுண்டுகளுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்' என்று முகநூலில் பதிவிட்டிருந்தமைக்கு எதிராகவே மேற்படி முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளானவர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தக் கூடாதென்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் டாக்டர் வசந்தவின் செயற்பாடு ஒரு தனிமனிதன், இனத்தை அவமதிப்பதாகவும் இனவெறுப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளதாக இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டாக்டர் வசந்தவுக்கு எதிராக இலங்கை மருத்துவ சபையில் மேற்கொண்டுள்ள முறைப்பாட்டில், மருத்துவதர்மத்தை கடுமையாக மீறல், நோயாளியின் தனித்துவத்தை வெளிப்படுத்தல், இனக் குரோதத்தை ஏற்படுத்தல், சமூகத்தைத் தப்பாக வழிநடத்தல் மற்றும் ஒரு தனிமனிதனை முறையற்ற விதத்தில் குற்றவாளியாக்கல் போன்ற மருத்துவ தர்மத்துக்கும் விதிமுறைகளுக்கும் எதிரான அம்சங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

மேற்படி இரு முறைப்பாடுகளின் பிரதிகள் சுகாதார திணைக்களம், அரச பொதுச் சேவைகள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் ஆகியவற்றுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## வைத்தியர்களின் பரிந்துரை இன்றி இனி மருந்து விநியோகம் இல்லை



வைத்தியர்களின் பரிந்துரை இன்றி, எந்தவொரு மருந்தையும் விநியோகிக்க வேண்டாம் என நாட்டிலுள்ள சகல மருந்தகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நோய் அறிகுறிகளைக் கூறி மருந்துகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டுக்கு இடமளிக்க வேண்டாமென, மருந்தக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, வைத்தியர் பரிந்துரை செய்த பற்றுச்சீட்டுகளுக்கு மாத்திரம் மருந்துகளை விநியோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## உயிர்த்த ஞாயிறு – 2020

உயித்தெழுந்தபோது
கிறீஸ்து
முரட்டுத்துணியாலான மாஸ்க் அணிந்திருந்தார்
தோமஸ்
திருக்காயங்களைச் சோதிக்க முன்னும் பின்னும்
கைகளைத் தொற்றுநீக்கியால் கழுவினான்

பூமியின் பாரம் குறையலானது
நாடு
முதியவர்களை
நாய்களைப் போல சாகவிட்டது
சைரனும் சேமக்காலை மணியும்
ஒலிக்காத பொழுதுகளில்
இத்தாலியர்கள்
ஆளரவமற்ற தெருக்களை
இசையால் நிரப்பினார்கள்.

கள்ளத் தீர்க்கதரிசிகள்
ஓடியொளித்த காலமொன்றில்
மருத்துவர்களே
சமூகத்தின் பேச்சாளர்களாக மாறினார்கள்

காற்றைப் பட்டங்கள் கைப்பற்றின
கடலை மீனினங்கள் கைப்பற்றின
வானத்தைப் பறவைகள் கைப்பற்றின
ஜலந்தரின்
மாசற்றவானில்
இமயமலை
ஒருநிலக்காட்சி ஓவியம் போலபடர்ந்துகிடந்தது

கிறீஸ்து
மாஸ்க் இல்லாமல்
உயிர்த்தெழும் காலமொன்றுக்காக
பூத்திருக்குமாம்
கொன்றைமரம்

– நிலாந்தன் –

## சுகமடைந்தார் புத்தளம்வாசி

புத்தளம் நகர சபைக்குட்பட்ட கடையான்குளம் பகுதியில், கொரோனா தொற்றுக்கு இலக்காகி, ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நபரொருவர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

இந்தோனேசியாவுக்கு சென்ற இந்த நபர், மார்ச் மாதம் 16ஆம் திகதி புத்தளத்துக்கு வருகைதந்த நிலையில், சுகாதார பிரிவினரின் ஆலோசனையின் படி, அவர் 14 நாள்கள் வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்துள்ளார்.

அவ்வாறு சுய தனிமைப்படுத்தலில் இருக்கும்போது, மார்ச் மாதம் 28 திகதி சுகவீனம் காரணமாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், மேலதிக பரிசோதனைக்காக அன்றைய தினமே குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இதன்போது, அவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டதுடன், குருநாகல் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே, அவர் பூரண குணமடைந்து நேற்று முன்தினம் வீடு திரும்பியுள்ளார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## இறைமகன் இயேசு போல சாவிலிருந்து மீண்டெழுவோம்!

இன்று உயிர்த்த ஞாயிறு தினம்.

உலகைப் படைத்த கடவுளின் மகனாகிய இயேசு பூமியில் மனிதராகப் பிறந்தார். உலகத்தின் பாவங்களுக்காகப்பாடுகளைச் சுமந்தார். அவற்றுக்காகத் தன்னையே பலியாகக் கொடுக்க வேண்டித் துன்பங்களை அனுபவித்தார்.

ரோமனியர்களின் மிகக் கொடிய மரண தண்டனையான சிலுவைச் சாவுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார். அவரது உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு, தாம் முன்பாகவே கூறியபடி, சாவை வென்று மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்தார்.

உயிர்த் தெழுந்த பின்னர் தன் சீடர்களுக்குத் தரிசனம் தந்து, அவர்களைத் தம் தூய ஆவியால் நிரப்பி, உலகம் முழுவதும் சமாதானத்தின் செய்தியை எடுத்துச் செல்லும்படி பணித்தார். பின்னர் இயேசு விண்ணேற்றம் பெற்றார்.

இது கிறிஸ்தவ மக்களின் அழியா நம்பிக்கை.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனை, சாவு ஆகியவற்றை எடுத்துரைக்கின்ற நற்செய்தி நூல்கள் இதனைப் பதிவு செய்துள்ளன.

இயேசு கிறிஸ்து சாவின் மீது வெற்றி கொண்டு, உயிர் பெற்றெழுந்தமை உண்மையாக நடந்த வரலாற்று நிகழ்ச்சியாக கிறிஸ்தவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

அந்த வரலாற்று அற்புதத்தை குறிக்கும் ஞாயிற்றுக் கிழமைதான் இன்று.

இயேசுவின் பிறப்பும், வருகையும், போதனையும், சாவும், அந்தச் சாவை வென்ற உயிர்தெழுதலும், விண்ணேற்பும் ஓர் இழையில் தொடராகக் கோர்க்கப்பட்ட வரலாற்று நிகழ்வுகள்.

அந்த இழையாக – மைய அச்சாக – மூலமாக – பிரவகித்து நிற்பது ஒன்றுதான்.

அது – உலகுக்கான சமாதானம் என்ற ஒன்றேதான். அதனால்தான் கிறிஸ்துவை சமாதானப் பிரபு என்கின்றோம். இறைவனிடமிருந்து, இறைமகனாக இந்த மனுக்குலத்துக்கு அவர் கொண்டு வந்த செய்தி அந்த சமாதானம்தான்.

அவரது போதனைகள் யாவுமே மனுக்குலத்தை அமைதிப்படுத்தி, சமரசரத்தை ஏற்படுத்தி, சமாதானத்தை நிலை பெறச் செய்யும் தந்துவார்த்தங்களாகவே அமைந்தன.

ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டும், உயரிய மனிதகுல மாண்புக்கு வித்தானவர் இயேசு.

திக்குத் திசை தெரியாது இன்று தடுமாறி நிற்கும் மனித குலத்தை அந்த மேய்ப்பரின் வழிகாட்டல்தான் சரியாக நெறிப்படுத்தக் கூடியது.

அழிவிலிருந்து – இறப்பிலிருந்து – மீண்டெழலாம் என்ற இறைமகனின் இன்றைய உயிர்த்த ஞாயிறு முன்மாதிரி நம்பிக்கைதான் – நம்பிக்கை மட்டும்தான் – இப்போது தடுமாறி நிற்கும் பூமிப்பந்துக்கு நம்பிக்கையையும், மீட்சியையும், மீளுயிர்ப்பையும் தரவல்லது.

கொரோனாப் பேரழிவு என்ற சாவுக்குள் உலக சமூகம் இன்று முடங்கிக் கிடக்கின்றது. வல்லரசுகளாக ஆர்ப்பரித்த தேசங்கள் கூட கண்ணுக்குத் தெரியாத வைரஸ் என்ற அந்த எதிரிக்கு முன்னால் மண்டியிட்டுக் கிடக்கும் அவல நிலைமை.

உயிரும், உணர்வும், இரத்தமும், சதையுமாய் இருந்த தமது உறவுகள் கண்ணுக்குத் தெரியாத மிக அற்பமான காலனினால் காவு கொள்ளப்படுகின்ற காட்சிகளை சகிக்க முடியாது மானுட குலத்தவர்கள் துவண்டு நிற்கும் இந்தத் துயர நிலையில், இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கை தரும் முன்மாதிரியான வாழ்வு, இறைவன்பால் விசுவாசத்தைக் காட்டி, உலகையை நம்பிக்கையூட்டுவதாக அமைகின்றது.

இயேசு தாம் உயிரிவாழ்ந்த காலத்தில் எதைப் போதித்தாரோ அதையே தமது சாவின் போதும் கடைப்பிடித்தார். சிலுவையில் தொங்கிய இயேசு அப்போதும் கூட தம் பகைவரை மன்னித்தார். சமுதாயத்தில் விளிம்புக்குத் தள்ளப்பட்டோர் மட்டில் பரிவு காட்டினார். கடவுள் மேல் நம்பிக்கை வைத்தார்.

இயேசுவின் மரணம் ஒரு தோல்வியாக அல்லாமல் ஒரு நிறைவாகக் காட்டப்படுகின்றது. இயேசு உயர்த்தப்பட்டார். முதலில் சிலுவையில் உயர்த்தப்பட்டார். சாவுக்குப்பின் உயிர்த்தெழுந்தமையால் விண்ணேற்றம் அடைந்தார். அதனால் மீண்டும் உயர்த்தப்பட்டார்.

சாவிலும் உயர்வு என்ற இந்தத் தத்துவம் உலகின் இன்றைய நிலையில் அதற்கு ஒரு போதனைதான்.

கொரோனா என்ற பேரழிவு வைரஸ் தரும் சாவிலிருந்து மனிதகுலம் உயிர்த்தெழ வேண்டும்.

அதற்கு இறைமகனின் வாழ்வும், போதனையும், விண்ணேற்பும் வழிகாட்டுவனவாக அமையட்டும்.

## வைத்தியர்களின் பரிந்துரை இன்றி இனி மருந்து விநியோகம் இல்லை

வைத்தியர்களின் பரிந்துரை இன்றி, எந்தவொரு மருந்தையும் விநியோகிக்க வேண்டாம் என நாட்டிலுள்ள சகல மருந்தகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நோய் அறிகுறிகளைக் கூறி மருந்துகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டுக்கு இடமளிக்க வேண்டாமென, மருந்தக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, வைத்தியர் பரிந்துரை செய்த



பற்றுச்சீட்டுகளுக்கு மாத்திரம் மருந்துகளை விநியோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.











தற்போதைய ஊரடங்கால் பாதிக்கப்பட்டிருக்கும் - அன்றாட உழைத்துச் சம்பாதிக்கும் 250 குடும்பங்களுக்கு சண்டிலிப்பாய் சந்தியில் உள்ள 'கே பூட் சென்றர்' ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

### மனநலம் பாதிக்கப்பட்ட 13 வயது சிறுமி மீது வன்புணர்வு:

## கட்சி உறுப்பினரை விலக்கியது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி

### பிரதேச சபை உறுப்பினர் பதவியும் பறிப்பு

மொனராகலை, செவனகல, கிரிவெவ பகுதியைச் சேர்ந்த சிறுமியை மூன்று மாதங்களுக்கு மேலாக வன்புணர்ந்த குற்றச் சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தணமல்வில பிரதேச சபை உறுப்பினர் ஆர்.ஏ. ரணவீர கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பிரதான செயலாளர் சாகர காரியவசத்தால் உடன் அமுலுக்கு வரும் வகையில் பிரதேச சபை உறுப்பினர் ஆர்.ஏ. ரணவீரவின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. அதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து அவரை விலக்குவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பிரதான செயலாளர் தெரிவித்துள்ளார்.

13 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தனர் என ரீலங்கா பொதுஜன முன்னணியின் தணமல்வில பிரதேச சபை உறுப்பினர் ஆர்.ஏ. ரணவீர உட்பட 5 பேர் கைதுசெய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நாளை**

**13.04.2020**
**திங்கட்கிழமை**

நட்சத்திரம்: மூலம் பி.இ 12.36
திதி : ஷஷ்டி மு.இ 10.22

இராகுகாலம் : 7.36 - 9.06
சுப நேரம் : 12.06 - 1.36

# 90 ஆண்டுகளில் மோசமான பொருளாதார மந்தம் இது!

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை; மீள்வதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும்

1930ஆம் ஆண்டுக்குப் பின்னர், அதாவது 90 ஆண்டுகள் கழித்து உலகப் பொருளாதாரம் மிக மோசமான மந்த நிலைக்குச் சென்றுள்ளது என்று எச்சரித்துள்ளது சர்வதேச நாணய நிதியம். இந்த நிலையில் இருந்து அடுத்த ஆண்டில் கூட மீண்டு வர முடியாது என்றும் அது தெரிவித்துள்ளது.

கொரோன வைரஸ் தொற்று காரணமாக உலக பொருளாதார வளர்ச்சி இந்தாண்டு எதிர்மறையாக இருக்கும் என்றும் அது தெரிவித்துள்ளது..

1930களில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார மந்தநிலைக்கு பிறகு, உலக பொருளாதாரம் இப்போதுதான் இவ்வளவு கடுமையான நெருக்கடியை சந்திக்க போகிறது என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிரிஸ்டலினா ஜார்ஜிவா கூறியுள்ளார்.

பல உலக நாடுகள் முழு அளவில் முடங்கி உள்ளதால் நிறுவனங்கள் மூடப்பட்டு, ஊழியர்களை பணி நீக்கம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக நிறுவனங்கள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மூடப்பட்டதால் 33 கோடி மக்கள், வேலையிழந்துள்ளார்கள் என ஐ.நாவின் ஆய்வு தெரிவிக்கிறது.

சர்வதேச நிதி ஆணையம் மற்றும் உலக வங்கியின் கூட்டம் அடுத்த வாரம் நடைபெற உள்ள நிலையிலேயே உலகப் பொருளாதாரம் குறித்த ஆரம்பகட்ட மதிப்பீடு குறித்து கிரிஸ்டலினா பேசினார்.

வளர்ந்துவரும் நாடுகள் இதனால் மிகவும் மோசமாக பாதிக்கப்படும் என்று குறிப்பிட்ட அவர், அந்நாடுகளுக்கு பில்லியன் டொலர் கணக்கிலான வெளிநாட்டு நிதி உதவிகள் தேவைப்படும் என்றும் தெரிவித்தார்.

2020ல் 160க்கும் மேற்பட்ட எங்கள் உறுப்பு நாடுகளில் தனி நபர் வருமானம் அதிகரிக்கும் என்று 3 மாதங்களுக்கு முன்னால் எதிர்பார்த்தோம். இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. தற்போது 170க்கும் மேற்பட்ட நாடுகளில் தனி நபர் வருமானம் வீழ்ச்சியடையும் என கணக்கிடப்பட்டுள்ளது என கிரிஸ்டினா கூறினார்.

இந்தாண்டின் இரண்டாம் பாதியில் கொரோனா வைரஸ் தொற்று நிலை சற்று சரியானாலும், இதனால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து அடுத்தாண்டில் கூடப் பாதி அளவே மீள முடியும் என்று குறிப்பிட்ட கிரிஸ்டலினா, இந்த நிலை மோசமானாலும் ஆகலாம் என்றும் எச்சரித்தார்.

மேலும், இந்த கோவிட் - 19 தொற்றால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியால் 50 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஏழ்மை நிலைக்கு தள்ளப்படுவார்கள் என பிரட்டனை அடிப்படையாக கொண்ட தொண்டு நிறுவனமான ஆக்ஸ்பாம் எச்சரித்துள்ளது.

இந்த பெருந்தொற்று பரவல் முடியும்போது உலகில் 780 கோடி மக்கள் ஏழ்மையில் இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையாக பாதிக்கப்படும் உலக பொருளாதாரம் சீராக பல ஆண்டுகள் ஆகலாம் என பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

2001ல் நிகழ்ந்த 9/11 தாக்குதல் அல்லது 2008இல் ஏற்பட்ட நெருக்கடியை விட உலக பொருளாதாரம் ஒரு பெரும் அதிர்ச்சியை சந்தித்துக் கொண்டு இருப்பதாக அதன் பொதுச் செயலாளர் ஏங்கல் குரியா கூறினார்

# பூனைகளுக்கும் கூட கொரோனா தொற்றும்

## சீனா ஆய்வில் கண்டுபிடிப்பு

மனிதர்களுக்கு மட்டுமின்றி பூனைகளையும் கொரோனா வைரஸ் தாக்கும் என்று சீன ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

உலகம் முழுவதும் மனித உயிர்களை காவு வாங்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸுக்கு விலங்குகளும் தப்பவில்லை.

அமெரிக்காவில் உள்ள உயிரியல் பூங்கா வில் நாடியா என்ற பெண் புலிக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த புலிக்கு பராமரிப்பாளர் மூலம் வைரஸ் பரவி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

விலங்குகளுக்கு கொரோனா வைரஸ் பரவுவது தொடர்பான ஆராய்ச்சியில் சீனா இறங்கியது. இதில் கொரோனா வைரஸை களை செறிவூட்டி அவற்றை நாய், பூனை, கோழி, வாத்து, பன்றி ஆகிய உயிரினங்களுக்கு ஊசி மூலம் செலுத்தி சோதனை செய்தது.

சில நாள்கள் கழித்து அந்த விலங்குகளை பரிசோதனை செய்த போது பூனைக்கு மட்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது தெரிய வந்தது. மனிதர்களுக்கு மட்டுமின்றி பூனைகளையும் கொரோனா வைரஸ் தாக்கும் என்று இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் பூனையிடம் இருந்து கொரோனா வைரஸ் மனிதர்களுக்கு பரவுமா? என்பது குறித்து இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பான ஆராய்ச்சி நடந்து வருவதாக சீன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமேசான் பழங்குடிகளுக்கும் தொற்றியது கொரோனா!

அமேசான் காடுகளில் வசித்து வரும் யனோமாமி இனத்தை சேர்ந்த 15 வயது சிறுவனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 210 நாடுகள் மற்றும் தனியாட்சி நிலங்களில் பரவிப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தற்போது அமேசான் காடுகளுக்கும் நுழைந்துவிட்டது.

யனோமாமி என அழைக்கப்படும் பழங்குடியினத்தவர்கள் அமேசான் காடுகளில் வசித்துவருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் வெளியுலக தொடர்பு இல்லாதவர்கள்.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா, இவர்களையும் விட்டுவைக்கவில்லை. யனோமாமி இனத்தை சேர்ந்த 15 வயது சிறுவனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ள பிரேசில் வெளியுறவுத்துறை மந்திரி லூயிஸ் ஹென்ரிக் மேன்டெட்டா, தற்போது அந்தச் சிறுவன் ரோரைமா மாகாணத்தில் உள்ள வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளான் எனத் தெரிவித்தார்.

# ஆப்கான் அதிபர் மாளிகையின் ஊழியர் 20 பேருக்கும் தொற்று

ஆப்கானிஸ்தானில் அதிபர் மாளிகையில் பணிபுரியும் 20 பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அதிபர் மாளிகையில் பணிபுரிந்த 20 பணியாளர்களுக்குக் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தொற்று ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது என்று அங்குள்ள ஊடகங்களில் நேற்றுச் செய்தி வெளியானது.

காபூலில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை தலைவர் அசாதுல்லா எஸ்மத் கூறும் போது, எங்களிடம் போதுமான மருத்துவ உபகரணங்கள் இருப்பின் எங்களது பரிசோதனை எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 555 பேருக்கு இது வரை கரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 18 பேர் கரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர்.

# உயிரித் தாக்குதல் நடத்துவதற்கு கொரோனா ஒரு முன்னோட்டம்

## இப்படி எச்சரிக்கிறார் ஐ.நா. பொதுச் செயலர்

உலகமெங்கும் உயிரி தாக்குதல் (பயோ வோர்) நடத்துவதற்கான முன்னோட்டத்தை கொரோனா வைரஸ் பரவல் வழங்கியிருப்பதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலகெங்கும் 17 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கின்றனர்.

இந்த நிலையில், கொரோனா வைரசால் எழுந்துள்ள சூழ்நிலை குறித்து நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில், அதிக அதிகாரம் கொண்ட பாதுகாப்புச் சபையில் முதல்முறையாக நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) விவாதம் நடந்தது.

இந்த விவாதத்தில் ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

கொரோனா வைரசுக்கு எதிராக நடத்தப்படுகிற இந்தப் போர், ஒரு தலைமுறையின் போராக அமைந்துள்ளது.

கொரோனா வைரஸ்நோய், முதலில் ஒரு தொற்றுநோய் ஆகும். இது பெரும் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. இதன் தாக்கங்கள் மிகவும் தொலைநோக்குடையவையாக இருக்கின்றன.

இந்த தொற்று நோய், சர்வதேச அளவில் அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

சமூக அமைதியின்மைக்கும், வன்முறைக்கும் இது வழி நடத்தும். இதெல்லாம் கொரோனா வைரஸ் தொற்றுநோயை எதிர்த்து போரிடுவதில் நமது திறனைப் பலவீனப்படுத்தி விடும்.

பலவீனங்களும், தயார் நிலை இன்மையும், இந்த தொற்றுநோய் ஒரு உயிரி பயங்கரவாத தாக்குதல் எவ்வாறு நடத்தப்படலாம் என்பதற்கான பாதையைக் காட்டுகிறது. இது ஆபத்துகளை அதிகரிக்கவும் கூடும்.

அரசு சாராக்குழுக்கள், கொரோனா வைரஸ் போன்ற பேரழிவை ஏற்படுத்தக்கூடிய கடுமையான தாக்குதலை நடத்துவதற்கு வழியை பெறும். இதன் மூலம் உலகமெங்கும் உள்ள சமூகங்களுக்கு பேரழிவை ஏற்படுத்த முடியும்.

உலக நாடுகளில் உள்ள அரசுகள் அனைத்தும் கொரோனா வைரசுக்கு எதிரான போரில் தீவிரமாக கவனத்தை செலுத்தி வருகிறபோது, பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கான வழியையும் இதிலிருந்து பெறலாம்.




இது வன்முறைகள் அதிகரிப்பதற்கும், அழிவுகரமான தவறான கணக்கீடுகளுக்கும் வழிவகுக்கும். இது ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிற போர்களை மேலும் சிக்கலாக்கும். கொரோனா வைரசை எதிர்த்து நடத்துகிற போரையும் சிக்கலாக்கும். - இவ்வாறு அவர் கூறினார்.

# மேலும் 2 வாரங்களுக்கு இந்தியாவில் ஊரடங்கு

## இன்று அறிவிப்பு வெளியாகலாம்



இந்தியாவில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையாக ஏப்ரல் 14ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்படலாம் என்று தெரிகிறது. அது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு அனேகமாக இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊரடங்கு உத்தரவை நீடிப்பது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாநில முதலமைச்சர்களுடன் காணொலித் தொடர்பாடல் மூலம் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் இந்தக் கலந்துரையாடல் குறித்துக் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர்கள் பலரும் ஊரடங்கை நீடிக்கும் எண்ணத்துடனேயே மோடி இருக்கிறார் என்று தெரிவித்திருக்கிறார்கள்.


மோடியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாவதற்கு முன்பாகவே மகாராட்டிரா மற்றும் தெலுங்கானா மாநிலங்கள் ஏப்ரல் 30ஆம் திகதி வரை ஊரடங்கை நீடிப்பதாக அறிவித்துள்ளன.

நேற்றுக் கூடிய தமிழக அமைச்சரவையும் மேலும் இரு வாரங்களுக்கு ஊரடங்கு உத்தரவை நீடிக்கும் முடிவையே எடுத்துள்ளது.

இந்தியப் பிரதமருடன் நேற்று நடந்த கலந்துரையாடலின்போது தமிழக முதலமைச்சர் ஈ.பழனிச்சாமி உள்ளிட்ட பலரும் ஊரடங்கு மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்படவேண்டும் என்றே வலியுறுத்தினர்.

"ஊரடங்கு உத்தரவை நீட்டிப்பது என பிரதமர் மோடி எடுத்துள்ள முடிவு சரியானதாக இருக்கும். வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் இன்று இந்தியாவை ஒப்பிடுகையில் நாம் ஊரடங்கை முன்னரே அறிவித்துள்ளோம்.

தற்போது ஊரடங்கை திரும்பப் பெற்றால் நாம் எடுத்த அனைத்து முயற்சிகளும் வீணாகி விடும். எனவே, தற்போதைய சூழலின் முக்கியத்துவத்தைக் கருதி ஊரடங்கை நீட்டிப்பதே சரியான முடிவாக இருக்கும்" என டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.



# 8 ஆயிரம் பேருக்கு தொற்று

இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 8 ஆயிரத்து 63 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் 21 நாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 8 ஆயிரத்து 63 ஆக அதிகரித்துள்ளது என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 653 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், கொரோனா பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 249 ஆக உயர்ந்துள்ளது என தெரிவித்துள்ளது.

# ஊரடங்கு சமயத்தில் பிறந்தநாள் கொண்டாடிய அரசியல்வாதி!

## நடவடிக்கை எடுக்க எதிர்க் கட்சி வலியுறுத்து



ஊரடங்கு விதிமுறைகளை மீறி பிறந்தநாள் கொண்டாடிய பாரதீய ஜனதாக் கட்சி சட்டசபை உறுப்பினரின் செயல் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு காங்கிரஸ் கட்சிப்பிரதிநிதி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் அதிக அளவில் கூடும் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. மக்கள் சமூக விலகலைப் பின்பற்றி கொரோனா பரவலை தடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கர்நாடக மாநிலம் துருவேகரே தொகுதி பாஜக சட்டசபை உறுப்பினர் ஜெயராம் கடந்த வெள்ளிக்கிழமை பிறந்தநாள் கொண்டாடியுள்ளார். தும்கூர் மாவட்டத்தில் உள்ள அவரது கிராமத்தில் நடைபெற்ற இந்த விழாவில், கட்சி நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள் பலர் பங்கேற்றனர். அங்கு சமூக விலகலும் கடைப்பிடிக்கப்படவில்லை.

இது குறித்து காங்கிரஸ் தரப்பில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. அவர் மீது கட்சி தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சி வலியுறுத்தி உள்ளது.

"அனைத்துச் செயல்பாடுகள் குறித்தும் முதல்வர் நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன். ஏற்கனவே இது தொடர்பாக டிஜிபியிடம் மனு கொடுத்துள்ளோம். காவல்துறை உடனடியாக தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றார்.

## ஊரடங்குக்குள் சிக்கிக்கொண்ட

# தன் மகனை மீட்டுவர 700 கி.மீ. ஓடிய தாய்!



இந்தியாவில் திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் வெளி மாநிலத்தில் நிர்க்கதியாகி நின்ற தனது மகனை 700 கிலோ மீற்றர்கள் தொலைவிற்கு ஸ்கூட்ரிலேயே சென்று மீட்டு வந்த தாயைப் பற்றிய தகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தெலுங்கானா மாநிலம், நிஜாமாபாத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது., ரஷியா பேகம் எனும் 50 வயதுத் தாயே தனது மகனுக்காக உயிரையும் துச்சமாக மதித்து அவ்வளவு நீண்ட தூரம் பயணித்து மகனை மீட்டு வந்தார்.

பேகம் தெலுங்கானா, மராட்டிய மாநில எல்லையில் உள்ள போதான் என்ற இடத்தில் பாடசாலை ஆசிரியையாக வேலைபார்த்து வருகிறார். இவரது கணவர் 12 ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார்.

இவருக்கு 17 வயதில் ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகன் நிஜாமுதீன், ஐதராபாத்தில் தங்கி இருந்து மருத்துவ படிப்பில் சேர்வதற்காக 'நீட்' தேர்வுக்காகத் தயாராகி வந்தார்.

உடல் நலம் இல்லாமல் போன தனது நண்பனின் தந்தைக்கு உதவுவதற்காக அவர் ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூருக்கு சென்றிருந்த நிலையில் ஊரடங்குக்குள் மாட்டிக்கொண்டார்.

இந்தநிலையில் அவர் தனது தாயை செல்போனில் தொடர்பு கொண்டு தான் நெல்லூரில் சிக்கியுள்ள பரிதாப நிலையைத் தெரிவித்தார்.

தனது ஊரிலிருந்து 700 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள மகனை அழைத்துவர உடனேயே தனது ஸ்கூட்ரில் புறப்பட்டார் பேகம்.

ஊரடங்கு நேரத்தில், அவ்வளவு தொலைவுக்கு சென்று வர போலீஸ் அனுமதியைப்பெற வேண்டியது இருந்தது. அதனையும் வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

கடந்த திங்கட்கிழமை காலையில் ஒரு பையில் கொஞ்சம் உணவு எடுத்துக்கொண்டு, ஸ்கூட்டியில் புறப்பட்டார். ஆந்திரா, தமிழக எல்லையில் உள்ள நெல்லூரை மறுநாள் செவ்வாய்க்கிழமை மதியம் போய்ச் சேர்ந்தார். அங்கிருந்து மகன் நிஜாமுதீனை அழைத்துக்கொண்டு புறப்பட்ட அவர் புதன் கிழமை மாலை ஊருக்கு வந்து சேர்ந்தார்.

போக, வர மொத்தம் 1400 கி.மீ. இந்த நெடிய தொலைவை அந்த தாய், ஸ்கூட்ரில் கடந்து தன் மகனை அழைத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்துள்ளார்.

இரு வழி பயணத்தின்போதும் போலீஸ் சோதனை சாவடிகளில் நிறுத்தியபோது, ஒவ்வொரு இடத்திலும் தன் நிலையைச் சொல்லித்தான் அவர் நகர முடிந்தது. பல இடங்களில் அவரை போலீசார் சற்று ஓய்வு எடுக்க வைத்து ஆசுவாசப்படுத்தி உதவிகள் செய்தனர் என ரஷியா பேகம் கூறினார்.

# மீன்களுக்கு உணவாகும் தர்பூசனி; 144 தடை உத்தரவால் வந்த சோகம்

தமிழகத்தில் பிறப்பிக்கப்பட்ட 144 தடை உத்தரவால் கேட்பாரற்றுப்போன தர்பூசணிப் பழங்கள் ஏரிகளில் வளர்க்கப்படும் மீன்களுக்கு உணவாகி வருகின்றன.

தமிழகத்தின் பல பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் தர்பூசணி மற்றும் முலாம் பழங்களைச் சாகுபடி செய்துள்ளனர். இரு மாதங்களில் அறுவடை செய்யப்படும் இவ்வகை பயிர்களுக்கு ரூ.40 முதல் ரூ.50 ஆயிரம் வரையில் முதலீடுச் செலவு செய்யப்படும்.

கோடை காலம் தொடக்கத்தைக் கணக்கில் கொண்டு விவசாயிகள் இரு மாதங்களுக்கு முன்னர் தர்பூசணி மற்றும் முலாம் பழங்களைச் சாகுபடி செய்திருந்தனர்.

அவற்றின் அறுவடைக் காலம் தொடங்கிய நிலையில் கடந்த மாதம் கொரோனா வைரஸ் பரவலால் வெளிமாநிலங்களுக்குப் பொருள்கள் அனுப்புவது நிறுத்தப்பட்டது. தொடர்ந்து, பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையில், 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. இதனால், வெளி இடங்களுக்கும் இந்தப் பழங்களை அனுப்ப முடியவில்லை சில்லறை விற்பனைக்கும் கொடுக்க முடியவில்லை

இதனால், சாகுபடி நிலங்களிலேயே



பழுத்தும், அழுகியும் சேதமடைந்து வந்தது.

இப்போது அந்தச் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள ஏரிகளில் வளர்க்கப்படும் மீன்களின் உணவுக்கு தர்பூசணிப் பழங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு டன் ரூ.10 முதல் ரூ.12 ஆயிரத்துக்கு விற்பனையான தர்பூசணிப் பழங்கள், தற்போது ரூ.2 ஆயிரம் வரையில் விற்பனையாகிறது. இதனால், மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் தர்பூசணிப் பழங்களை மீன்களுக்கு உணவாக அளித்து வருகின்றனர்.

பவானி அருகேயுள்ள தாளகுளம் ஏரியில் மீன்களுக்கு 15 டன் தர்பூசணிப் பழங்களை வாங்கியுள்ளதாகவும், இது வரையில் 4 டன் பழங்கள் உணவுக்கு துண்டுகளாக வெட்டி போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்களும் தர்பூசணிப் பழங்களை விரும்பி சாப்பிடுகின்றன. இதனால், சாகுபடி நிலத்திலேயே அழுகி வீணாகும் பழங்களை, கிடைத்தவரை லாபம் எனும் நோக்கில் விவசாயிகளும் மிகக் குறைந்த விலைக்குவிற்பனைசெய்துவருகின்றனர்.

# வட்டுக்கோட்டை இளைஞன் உயிரிழப்பு; இரு அதிகாரிகளிடம் விளக்கம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 12

வட்டுக்கோட்டை பகுதியில் அண்மையில் இடம் பெற்ற இளஞனின் உயிரிழப்பு தொடர்பில் தொடர்புடைய இரண்டு சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

அண்மையில், வட்டுக்கோட்டை பகுதியில் சிறுநீரக நோயாளியொருவர் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டையை சேர்ந்த - சுவாசப் பிரச்சினையினால் அவதிப்பட்ட - இளைஞன் ஒருவர் ஊரடங்கு வேளையில் அவசர நோயாளர் காவு வண்டியை அழைத்துள்ளார். அவருக்கு கொரோனா தொற்று உள்ளதா என்பதை உறுதிசெய்ய நோயாளர் காவு வண்டி சாரதி உறுதிசெய்ய முயன்றார்.

எனினும், உடனடியாக சுகாதாரத்துறை சார்ந்தவர்களை தொடர்பு கொண்டு அதை உறுதிசெய்வதில் தாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தாமதத்தினால் அந்த நோயாளி உயிரிழந்தார் என்பதை வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் சுகாதாரத்துறையில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. இதையடுத்து, குறிப்பிட்ட பகுதியை சேர்ந்த இரண்டு சுகாதாரத்துறை அதிகாரிகளிடம், வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம் கோரியுள்ளார்.


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

காலைக்கதிர் Kalaikathir





# எல்லாமே அரசியலாகிவிட்டால்

# கொரோனா வைரஸ் நிரந்தரவாசியாகலாம்!

**பனங்காட்டான் - கனி**

நெருக்கடி வேளையிலும் அரசாங்கங்களின் பின்னால் மறைந்திருந்து அரசியல் வழிநடத்துவது தெரிகிறது. ஜனநாயகம் என்பது அவசர கால வேளைகளில் சிறிதளவாவது ஒருநிலை முடிவெடுப்பதாக இருக்க வேண்டும். மக்கள் மரணித்து நாடு சுடுகாடான பின்னர் அரசியலைக் கையிலேந்துவதில் பயனில்லை. இப்போதைய காலம் போர்க்காலம் போன்றது. நடவடிக்கைகளும் அமுல்படுத்தல்களும் அவ்வாறே அமைய வேண்டும். இல்லையேல் கொரோனா நிரந்தரவாசியாகி அனைத்தையும் ஆட்சி புரியக்கூடும்.

கொரோனா என்பது இந்த நூற்றாண்டின் மிகப் பிரபலமான, மிக முக்கியமான பெயராக மட்டுமன்றி அதிமுக்கிய பயங்கரவாதியாகவும் இப்போது காணப்படுகிறது.

படித்தவர்கள் படிக்காதவர்கள், குழந்தை குஞ்சுகள், இளையோர், மூத்தோர் வரை அனைவருக்கும் சிம்மசொப்பனமாக இது மாறிவிட்டது.

எதற்கும் அஞ்சாதவர்கள் கூட கொரோனா என்ற பெயரைக் கேட்டவுடனேயே அச்சமடைகின்றனர். எந்தச் சத்தமுமின்றி கண்களுக்குப் புலப்படாது காற்றோடு காற்றாக வந்து மனிதக் கலங்களுக்குள் சென்று இது உயிர்க்கொல்லியாக மாறிவிடுகிறது.

சீனாவில் ஆரம்பமாகி, மேற்கு நாடுகளில், பரவி இறுதியிலேயே வடஅமெரிக்காவை ஆக்கிரமித்து, இன்று ஆட்சி புரிகிறது. வடஅமெரிக்கா என இங்கு குறிப்பிடப்படுவது டொனால்ட் ட்ரம்பை ஜனாதிபதியாகக் கொண்ட அமெரிக்காவையும், ஜஸ்ரின் ரூடோவைப் பிரதமராகக் கொண்ட கனடாவையும் உள்ளடக்கிய பரந்த பிரதேசம்.

இரண்டு நாடுகளினதும் சனத்தொகை சுமார் 368 மில்லியன். இவர்களுள் எத்தனைபேர் இன்னும் சில மாதங்களில் இருப்பார்களென்பதை நிச்சயமாகக் கூற முடியாதவாறு கொரோனா பரம்பல் வீச்சுக் கொண்டுள்ளது.

சிலவேளை இவ்வருட முடிவிலும் அடுத்தாண்டு ஆரம்பத்திலும் குழந்தைகள் பிறப்பு வீதம் அதிகமாகலாமென்ற சிலரின் ஆருடம் சனத்தொகைச் சமப்படுத்தலை சிலவேளை ஏற்படுத்தலாம்.

இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி, பிரித்தானியா என்று மேற்கு நாடுகளில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தவேளை கனடிய - அமெரிக்க நாடுகளின் அரசாங்கங்களும் அதன் தலைவர்களும் இதனை சீரியஸாகப் பார்க்கவில்லையென்று இப்போது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி கனடாவின் முதலாவது கொரோனா நோயாளி ஒன்ராறியோ மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டாரென இந்த மாதம்தான் தகவல் வெளிவந்துள்ளது. இங்கேயே தமிழர்கள் சுமார் இரண்டு லட்சம் பேர் வரை செறிந்து வாழும் ரொறன்ரோ பெருநகரம் உள்ளது.

பெப்ரவரி மாதம் நடுப்பகுதிவரை இங்கு எல்லாமே வழமைபோல் நடைபெற்றனவென்றால் கனடிய அரசும், சுகாதாரப் பகுதியினரும் ஏன் அசமந்தமாக இயங்கினர் என்ற கேள்வி எழுகிறது. இந்தக் காலத்தில்தான் கொரோனாவை ஓர் அரசியல் புரளியென்று ட்ரம்ப் நையாண்டி செய்தாரென்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கு நாடுகளில் இந்நோயின் தாக்கம் குறைவதாகவும், கட்டுப்பாட்டுக்குள் வருவதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்காவிலும், கனடாவிலும் நோயாளர் தொகையும் மரணிப்போர் எண்ணிக்கையும் மேலோங்கி வருகிறது.

மருத்துவ உபகரணங்கள், முகக்கவசங்கள், கையுறைகள், செயற்கைச் சுவாச கருவிகள் என்பவற்றுக்கு இங்கு தட்டுப்பாடு நிலவுவதாக வரும் தகவல்களை அரசமட்ட அறிவிப்புகள் வெளிவரும்போது யாரிடம் முறையிடுவது, யாரைக் குறை கூறுவது என்று தெரியவில்லை.

இதற்குள்ளும் ஒருவகை அரசியல் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. கனடாவுக்குத் தேவையான மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சைக்குரிய தரமான முகக்கவசங்களை அமெரிக்காவிலுள்ள ஒரு தனியார் நிறுவனமே தயாரிக்கிறது. வழமைபோல அதனிடம் பல்லாயிரம் கவசங்களை கனடிய அரசு அண்மையில் கேட்டது.

அமெரிக்காவுக்குத் தேவையாக இருப்பதால் கனடாவுக்கு வழங்க வேண்டாமென அந்நிறுவனத்துக்கு ஜனாதிபதி ட்ரம்ப் விடுத்த உத்தரவு கனடிய மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மலேரியா நோய்க்குப் பயன்படுத்தப்படும் ஹைட்ரோக்சிகுளோரைன் மருந்துக் குளிசைகளை இந்தியா பெருமளவில் தயாரிக்கிறது. அதனை அமெரிக்கா இந்தியாவிடம் கேட்டபோது தனது மக்களுக்கே அது தேவையெனக் கூறி இந்தியா மறுத்தது.

தமது கோரிக்கையை இந்தியா நிராகரித்தால் பாரிய பதிலடியைச் சந்திக்க நேருமென்ற ட்ரம்பின் மிரட்டலுக்குப் பயந்து 2.90 கோடி மாத்திரைகளை இந்தியா உடனடியாக அனுப்பியது. தாமதமின்றி பிரதமர் மோடியைப் பார்த்து உண்மையில் நீங்கள் பெரிய மனிதர்தான் என்று ட்ரம்ப் பாராட்டியுள்ளார் என்றால் இதனை ஒருவகை அரசியல் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

இன்னொன்று - உலக சுகாதார நிறுவனம் சீனாவின் பக்கம் சார்ந்து அதற்கு ஆதரவாக இயங்குவதாக ட்ரம்ப் ஒரு குண்டைத் திடீரெனத் தூக்கி வீசினார். அதுமட்டுமன்றி, இந்நிறுவனத்துக்கான நிதிப் பங்களிப்பை அமெரிக்கா நிறுத்தப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்தார்.

உலக சுகாதார நிறுவனம் மிக அமைதியாக நான்கு வார்த்தைகளில் இதற்குப் பதிலளித்தது. இன்றைய நெருக்கடியை அரசியலாக்க வேண்டாம் என்பதே அந்தப் பதில்.

இன்னொரு நாள் ஏதாவது கனவு கண்டுவிட்டு எதையாவது ட்ரம்ப் உளறமாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இவ்விடத்தில் டேவிட் ஃப்ரம் என்ற ஆய்வாளர் இது ட்ரம்பின் தவறு என்ற தலைப்பில் ஓரிரு நாள்களுக்கு முன் எழுதிய கட்டுரையொன்றின் முக்கிய பகுதியை கீழே தருகின்றேன்:

> ஜனநாயகமென்பது அவசர கால வேளைகளில் சிறிதளவாவது ஒருநிலை முடிவெடுப்பதாக இருக்க வேண்டும். மக்கள் மரணித்து நாடு சுடுகாடான பின்னர் அரசியலைக் கையிலேந்துவதில் பயனில்லை. இப்போதைய காலம் போர்க்காலம் போன்றது. நடவடிக்கைகளும் அமுல்படுத்தல்களும் அவ்வாறே அமைய வேண்டும். இல்லையேல் கொரோனாவே நிரந்தரவாசியாகி அனைத்தையும் ஆட்சி புரியக்கூடும்.

'மார்ச் மாதம் 13ம் திகதி றோஸ் பூங்காவில் ட்ரம்ப் உரையாற்றுகையில் கொரோனா பற்றிக் குறிப்பிட்டு தாம் எந்தப் பொறுப்பையும் ஏற்கப்போவதில்லையென்றார். இந்த வார்த்தைகள் அவரது கல்லறை வாசகம் போன்று அமைந்தது. ஆனால் இப்போது தம்மைப் போர்க்கால ஜனாதிபதியென்று காட்ட முனைகிறார். இந்தப் போர் எவ்வாறானது? அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலில் இறந்தவர்களைவிட அதிகமானவர்கள் மார்ச் மாத இறுதியில் மரணித்துவிட்டனர். அமெரிக்கா எந்தவொரு சிவில் யுத்தத்திலும் இழந்தவர்களைவிட அதிகமானவர்கள் ஏப்ரல் முதல் வாரத்தில் மரணித்துவிட்டனர். கொரிய யுத்தத்தில் இறந்தவர்களைவிட இந்த வார ஈஸ்ரர் காலத்தில் கூடுதலானவர்கள் மரணித்துவிடுவர். வியட்நாம் யுத்தத்தில் இறந்தவர்களைவிட ஏப்ரல் மாத இறுதியில் அதிகமானோர் மரணித்துவிடுவர். தாம் நல்லவாறு பணிபுரிவதாக இப்போது கூறும் ட்ரம்ப், இரண்டு லட்சத்துக்கும் குறைவானவர்களே கொரோனாவால் மரணிப்பரென்று தெரிவித்துள்ளார்எனஇக்கட்டுரையதார்த்தமாகஎழுதப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க அரசின் நடவடிக்கையே அங்கு அதிகமான மரணங்களை ஏற்படுத்துவதை இக்கட்டுரை புலப்படுத்துகிறது. ஏறத்தாழ இதேவாறான ஒரு போக்கில் தான் கனடாவும் சென்று கொண்டிருக்கிறது.

தினமும் காலையிலிருந்து மாலைவரை பிரதமரும், மாகாண முதலமைச்சர்களும், நகர முதல்வர்களும், மருத்துவ முதன்மையாளர்களும் தொலைக்காட்சி மற்றும் வானொலி வழியாக நேரலை உரையாற்றுகின்றனர். நிவாரணமும் சலுகைகளும்தான் இங்கே முதன்மைப்படுத்தப்படுகின்றன.

கனடாவில் இதுவரை ஒரு மில்லியன் மக்கள் நேரடியாக வேலை இழந்துள்ளனர். சுமார் மூன்று மில்லியன் வரையானோர் வருமானம் இழந்துள்ளனர். இன்னொரு தொகையினர் நோயாளிகளாகி அச்சத்தில் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.


தினமும் ரொக்கட் வேகத்தில் நோய் பரவலும், அதற்கு நிகராக மரணங்களும் நிகழ்கின்றன. மருந்து எதுவும் இதுவரை கண்டறியப்படாததால் மரணங்களை அரசியல்வாதிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலை தொடருமானால் கனடிய சனத்தொகையான முப்பத்தேழு மில்லியனின் 2.5 சதவீதத்தினர் கொரோனாவால் பீடிக்கப்படுவர். குறைந்தது 22,000 பேர் மரணிக்க வாய்ப்புண்டு என்று கனடிய பிரதம மருத்துவ அதிகாரி திரேசா ராம் அறிவித்துள்ளார்.

நிலைமை கட்டுப்பாட்டை மீறுமானால் அனைத்து எண்ணிக்கையும் இரண்டு மடங்காகும். மரணிப்போர் தொகை நாற்பதாயிரத்தைத் தாண்டலாமெனவும் இவர் எச்சரித்துள்ளார். ஒன்ராறியோ மாகாணத்து நிலைவரம் வேறு விதமானது.

ஒரு நாளில் 480க்கும் அதிகமானோர் நோய் வாய்ப்பட்டுள்ளனர். இப்போது தினமும் நோய்வாய்ப்படுவோர் தொகை இரட்டிப்பாகி வருகிறது. இதுவரை மரணித்தோர் தொகை 220க்கும் அதிகம். ஒன்ராறியோவின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் டொனாலி திடீரென பதவி துறந்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க..)

# உயிர்த்த ஞாயிறும் கொரோனாவும்!

## கண்ணுக்கு தெரிந்த எதிரியும் கண்ணுக்குத் தெரியாத எதிரியும்!!

முருகபூபதி

இயேசு கிறிஸ்து ஆறு மணி நேரம் சிலுவையில் தொங்கினார். முதல் மூன்று மணி நேரங்கள் அவர் ரோம வீரர்களாலும், மற்றவர்களாலும், அடிக்கப்பட்டு, இழிவாகப் பேசப்பட்டு, எள்ளிநகையாடப்பட்டு, வேதனைகளை அனுபவித்தார். அவற்றை எல்லாம் பொறுமையாகப் பொறுத்துக் கொண்டார். ஆறாம் மணி நேரம் முதல், ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் அந்தகாரம் பூமியை மூடிக் கொண்டது.

அந்த ஒன்பதாம் மணிநேரத்தில்இயேசு: ! ஏலி! ஏலி! லாமாசபக்தானி என்று உரத்துச் சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என்தேவனே! என்தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்..?என்றுஅர்த்தம். – (மத்தேயு 27:45 – 46)

இந்த வாசகங்களை ஏற்கனவே படித்திருப்பீர்கள். கடந்த வெள்ளிக்கிழமை 10ஆம் திகதி யேசுபிரான் சிலுவையில் அறையப்பட்ட தினம். அதனால் அதனை பெரிய வெள்ளி என்று தமிழிலும் Good Friday என்று ஆங்கிலத்திலும் அழைப்பர்.

அத்தகைய ஒரு துக்க தினத்தில் தேவாலயங்கள்



சென்று வழிபட்ட மக்கள், யேசுபிரான் உயிர்த்த ஞாயிறு தினத்தில் காலையிலேயே அங்கு மீண்டும் வந்து பிராரர்த்தித்துவிட்டு, சம்மனசுகள் புடைசூழ யேசுவின் திருச்சொரூபம் பவனிவரும் காட்சியைக் கண்டுகளிப்பார்கள். வழக்கமாக உலகெங்கும் நடக்கும் இந்த நிகழ்வு இந்த வருடம் வழக்கம் போன்று வெளியே பகிரங்கமாக நடைபெறுவதற்கான வாய்ப்பில்லை.

யேசுவை சிலுவையில் அறைவதற்கு அன்று கண்ணுக்குத் தெரிந்த எதிரிகள் இருந்தனர். இன்று உலகமக்களைகொன்றழிப்பதற்குகண்ணுக்குத் தெரியாத எதிரி தோன்றியுள்ளான்.

யேசு இரண்டு நாள்களில் உயிர்ப்பித்தார். ஆனால், மக்கள்?

சமகாலத்தில், கொரோனே எதிர்பாராமல் வந்து முழு உலகத்தையும் முடக்கியிருக்கிறது. அதனால் உயிர்தெழுந்த யேசுபிரானும் சம்மனசுகளுடன் வெளியே செல்லாமல் தேவலாயங்களில் தங்கிவிட்டார்.

இலங்கையில் நேற்று முன்தினம் பேராயர் இல்லத்தில் பிரார்த்தனை சிலருடன் அமைதியாக நடந்துள்ளது. அவ்வாறு ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் நடந்திருக்கலாம்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இதே உயிர்த்த ஞாயிறு தினத்தில் நிகழ்ந்த நுற்றுக் கணக்கானோர் உயிர் நீத்த நினைவுகளை எளிதாக கடந்து செல்லமுடியாது.

கடந்த ஆண்டு யேசுபிரான் சம்மனசுகளுடன் வெளிவீதி வருவதற்கான தருணம் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர், அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் பலர் பலிகொள்ளப்பட்டனர். கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார், நீர்கொழும்பு கட்டுவபிட்டிய புனித செபஸ்தியார் , மட்டக்களப்பு சீயோன் தேவாலயங்களில் மக்கள் பலியாகினர்.

தலைநகரில் நட்சத்திர விடுதிகளில் ஈஸ்டர் விடுமுறையில் வந்து தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் மற்றும் உள்நாட்டினர் பலரும் கொல்லப்பட்டனர். யேசுபிரான் உயிர்த்தெழுந்த தினத்தில் முந்நூறுக்கும் அதிகமான மக்கள் உயிர் துறந்தனர்.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மத்தியிலிருக்கும் சீயோன் தேவாலயத்தின் ஏற்பாட்டில் கடந்த சிலவருடங்களாக மக்கள், ஆதார மருத்துவமனை

> யேசுவை சிலுவையில் அறைவ தற்கு அன்று கண்ணுக்குத் தெரிந்த எதிரிகள் இருந்தனர். இன்று உலக மக்களை கொன்றழிப்பதற்கு கண்ணுக்குத் தெரியாத எதிரி தோன்றியுள்ளான். யேசு இரண்டு நாள்களில் உயிர்ப்பித்தார். ஆனால், மக்கள்?

களில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்காக இரத்ததானம் வழங்கிவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தகுந்த செய்தி.

கடந்த 2019 ஆம் ஆண்டிலும் இந்தத் தேவாலயத்தின் ஏற்பாட்டில் போதகர் றொசான் மகேசன் தலைமையில் இரத்த தான நிகழ்வொன்று நடைபெற்றது. மருத்துவர் விவேக் தலைமையில் தாதியர் குழுவொன்று அந்த நற்பணிகளை கவனித்திருக்கிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அதே தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்தவர்களுக்கு இரத்த வங்கிகள் உதவவேண்டியிருந்தது.

இந்த ஆண்டில், யேசுபிரான் சிலுவையில் அறையப்பட்ட துயரதினத்திலும் அவர் உயிர்த்த தினத்திலும் மக்கள் கொரோனோ வைரஸின் அச்சுறுத்தலுக்குப் பயந்து, தங்கள் உயிரைக் காக்கவும் வெளியே இருப்பவர்களின் உடல் நலத்திற்காகவும் வீடுகளுக்குள் முடங்கியிருந்தவாறு, என் தேவனே – என் தேவனே ஏன் எம்மை இப்படிக் கைவிடுகிறீர்? என்றுதான் கேட்கத்தோன்றுகிறது!

> **ஏலி! ஏலி! லாமாசபக்தானி**
> **என்தேவனே! என்தேவனே!**
> **ஏன் என்னைக் கைவிட்டீர்?**

இலங்கையில் கடந்தஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்பு தாக்குதலில் எங்கள் நீர்கொழும்பூரும் பாதிக்கப்பட்டதையடுத்து, உலகின் பல பாகங்களிலுமிருந்து நண்பர்கள்,



தெரிந்தவர்கள் பலர் தொலைபேசியிலும் மின்னஞ்சலிலும் தொடர்புகொண்டு வருத்தம் தெரிவித்து, எமது உறவினர்களுக்கும் ஏதும் நடந்துவிட்டதா எனக்கேட்டு விசாரித்தனர்.

ஆம், அங்கு கொல்லப்பட்டவர் அனைவரும் எமது உறவுகள்தான் என்றேன்! யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற மரபில் வளர்ந்திருப்பவர்களுக்கு, – ஓரிறை கொள்கையை போதித்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்கள் அனைவரும் ஓர் நிறை என்பதையும் எடுத்தியம்பினார்கள். என்ற



வாசகங்களை கேட்டு வளர்ந்தவர்களுக்கு, அந்தக் கொடூர சம்பவங்களில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும், பாதிக்கப்பட்டவர்களும் உறவினர்கள் தான்!

அவ்வாறு இந்த ஆண்டும் இத்தருணத்தில் உலகெங்கும் வாழும் உறவினர்கள் நண்பர்கள், இரவு பகல் நேரம் காலம் பாராமல் பல வழிகளிலும் தொடர்புகொண்டு நலம் விசாரிக்கின்றனர். வானொலி ஊடகங்கள் நேர்காணல்களுக்கு அழைக்கின்றன.

அதற்குக் கண்ணுக்குத் தெரியாத எதிரி தான் காரணம்!

நாம் பள்ளியில் படிக்கின்ற காலத்திலும் அதற்குப் பின்னரும் கேள்வியுற்றிராத மதம், இனம், மொழி சார்ந்த பல பயங்கரவாத – தீவிரவாத இயக்கங்கள் பற்றி தற்காலத்தில் அறிகின்றோம். இவற்றுக்குப் பின்னால் சர்வதேச வலைப்பின்னல் படர்ந்திருப்பது நன்கு தெரிகிறது.

அது போன்று முன்னர் கேள்விப்பட்டிராத வைரஸ் தொற்றுக்கள் பற்றி தற்போது அறிகின்றோம். இதற்கும் சர்வதேச வலைப்பின்னல் இருக்குமோ..? என்று பலரும் மண்டையை குடைந்துகொண்டிருக்கின்றனர்!

இந்தப் பின்னணியில், வளர்முக நாடாக விளங்கும் எங்கள் இலங்கை மணித்திருநாட்டின் ஆட்சியாளர்களும் பாதுகாப்பு விடயத்தில் மக்களும் எவ்வாறு இந்த சவால்களை எதிர்கொள்ளப்போகிறார்கள்?



(15 ஆம் பக்கம் பார்க்க..)

# இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் நாம் ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும்

## உயிர்ப்பு விழாச் செய்தியில் யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும் எனத் தமது உயிர்ப்பு விழாச் செய்தியில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலகம் முழுவதும் உறைந்து போயுள்ளது. மரணங்கள் மலிந்து பொருளாதாரம் நலிந்து சொல்லொணா வேதனைகளுடன் மனுக்குலம் முழுவதும் கல்வாரிப் பாதையில் கொல்கொதா மேட்டில் சிலுவை சுமந்து நிற்கின்றது. நிச்சயம் ஆண்டவரின் உயிர்ப்பு நம்மை மீட்கும்.

வீடுகளுக்குள்ளே முடக்கப்பட்டு ஆலய வழிபாடுகளின்றி வாழும் நாம் எமது வீடுகளை ஆலயங்களாக மாற்றி, குடும்ப செபங்களிலும், இறை தியானங்களிலும் ஈடுபட்டு, இறை விசுவாசத்தை மேன்மேலும் ஆழப்படுத்த வேண்டும்.



இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் நாம் ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அரசியல் ரீதியான பகைமைகளையும், சமூக ஏற்றத் தாழ்வுகளையும், மத ரீதியான பிரிவுகளையும், மறந்து, மன்னித்து, மனிதநேயம் மிக்கவர்களாக ஒன்றிணைந்து, நாட்டு நலன், சமூகநலன், குடும்ப நலன் என்பவற்றை பேணிக்கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபடின் அபாயங்களிலிருந்து நாம் மீண்டெழ முடியும்.

அபாயகரமான இவ்வேளையில் நமது நாட்டில் தன்னலங் கருதாப் பணிபுரியும் அர்ப்பணிப்பு மிகுந்த அனைத்து உள்ளங்களையும் நன்றியோடு நினைவுகூருகின்றேன்.

அனைவருக்கும் எனது இறை ஆசீரை வழங்கி செபித்து நிற்கின்றேன். உயிர்த்த இயேசு கொணரும் அன்பும் சமாதானமும் உங்கள் குடும்பங்களில் என்றும் தங்குவதாக,

காலைக்கதிர் Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37


ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# அற்புதச் சிலுவையின் கீழ் புனித வார நிகழ்வுகள்

தொற்றுக்கிருமி உயிர்க் கொல்லி நோய் பல உலக நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்ற இந்தத் துன்ப நேரத்தில் புனித வார நிகழ்வுகளை உரோம் நகரின் புனித மார்செல்லோ ஆலயத்தில் உள்ள அற்புதச் சிலுவையின் கீழ் புனித பேதுரு பெருங்கோவிலில் நிறைவேற்ற உள்ளார் அறிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உரோமை நகரில் உள்ள பழம் பெரும் ஆலயங்களில் ஒன்றான புனித மார்ச்செல்லோ ஆலயத்தில் 15ஆவது நூற்றாண்டில் செய்யப்பட்ட மரத்தாலான இந்த அழகிய திருச்சிலுவையான இவ்வாலயம் 1519ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி இரவு நேரத்தில் தீப்பிடித்து எரிந்து முழு ஆலயமும் சாம்பலானபோதிலும் இந்த சிலுவை மட்டும் அப்படியே எந்தவித பாதிப்பும் அடையாமல் இருந்தது என்பதும், அதன் அடியில் ஒரு சிறிய எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கன.

இது நடந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கொரோனா தொற்றுக்கிருமி போன்ற மிகப் பெரிய கொள்ளை நோய் உரோமை நகர் எங்கும் பரவி பலர் இறந்தனர். உரோமை நகரமே துன்பத்தில் மூழ்கி இருந்த நேரத்தில் திருத்தந்தையின் அறிவுறுத்தலின் பேரில் புனித மார்ச்செல்லோ ஆலயத்தின் அதிசயச் சிலுவையானது 1522ஆம் ஆண்டு ஓகஸ்டு 4 முதல் 20ம் திகதி வரை ஏறத்தாழ 16 நாள்கள் உரோமை நகரத்தின் முக்கியமான வீதிகள் வழியாக புனித பேதுரு



ஆலயம் நோக்கிப் பவனியாகக் கொண்டு செல்லப்பட்ட வேளையில் இந்த அதிசயச் சிலுவை கடக்கின்ற பொழுது அதைப் பார்த்த நொடியே மக்கள் குணம்பெற்றனர் என வரலாறு கூறுகின்றது.

1522 ஆம் ஆண்டு ஏற்பட்ட கொள்ளை நோய் போன்றே இன்றும் இந்த கோவிட் – 19 நோயால் துன்புற்றிருக்கும் இந்த உலகை காப்பாற்ற வேண்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வார பாஸ்கா கால கொண்டாட்டங்களை, இந்த அதிசய சிலுவையின் கீழ் சிறப்பித்து வருகிறார்.

# உலக மக்கள் அனைவரையும் பாதுகாக்க இறையாசீரை எல்லோரும் வேண்டுவோம்

2020ஆம் ஆண்டு ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா உலகம் முழுவதிலும் கொண்டாடப் படும் வேளை உலகம் கொரோனா தொற்று நோயால் மரண பயத்திலும் நமக்கும் தொற்றிவிடுமோ என்ற பதற்றத்திலும் இருப்பது வேதனையானது.

உலக நாடுகளின் இறப்புகளோடு ஒப்பிடும் போது இலங்கை நாட்டின் இறப்புத்தொகை குறைவானது என்று சற்று ஆறுதல்பட்டு எம்மைப் பாதுகாத்த இறைவனுக்கு நன்றி சொல்லுவோம். உயிர்ப் பாதுகாப்புத் தேடிப் புலம் பெயர்ந்தவர்களின் மத்தியில் இனியும் இத்தொற்றினால் இறப்புக்கள் ஏற்படாமல் இருக்க இறைவன் வழி செய்வாராக.

30 ஆண்டு காலப் போரின் போது அனுபவிக்காத ஊரடங்கு வாழ்வை எதிர்நோக்கி – இயல்பு வாழ்வை வாழ முடியாது – தொழில் முயற்சிகளில் ஈடுபடமுடியாது – போதிய உணவின்றி தனிமைப் படுத்தப்பட்டு – வீடுகளில் முடங்கி இருக்க வேண்டியுள்ளது. இவை அனைத்தையும் நாம் பொறுமையோடும் நம்பிக்கையோடும் தனி மனித நன்மையும் மற்றும் பொது நன்மையையும் கருத்தில் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உலகெங்கும் மரண ஓலம் கேட்கிறது. இறப்பின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வல்லரசு நாடுகள் நிலமையை கட்டுப்படுத்த முடியாது திணறுகின்றன. மரணத்தின் முன் யாவரும் சமம் என்ற உண்மை உணரப்பட்டு வருகிறது. நாடு, நிறம், இனம், மதம்,மொழி என்ற வேறுபாடின்றி உலகமே ஒரு குடும்பம் என்ற உணர்வு மேலோங்கியுள்ளது. எந்த மனித சக்தியிலும் வல்மையிலும் யாரும் நம்பிக்கை வைக்க முடியாது என்ற உண்மையை இதோ மரணம் நெருங்கி வந்துவிட்டது என்ற எண்ணம் உணர்த்தியுள்ளது.

இன்று உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் அனைவரும் மத வேறுபாடின்றி இறை வேண்டலில் ஈட்டுள்ளனர். உலகின் எல்லாச் சமயத் தலைவர்களும் இதனையே வேண்டியுள்ளனர். முழு உலகும் எதிர்நோக்கியுள்ள இந்த நெருக்கடியான காலத்தில் மத வேறுபாடின்றி இறைவேண்டலில் ஈடுபடுவதே நாம் அனைவரும் தப்பித்துக் கொள்ள ஒரே வழியாகும்.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் தம் வீடுகளில் தங்கி இருந்து இறை நம்பிக்கையோடு தத்தம் சமய வழிபாடுகளில் ஈடுபடும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். இரக்கம் மிகுந்த இறைவன் இலங்கை மண்மேல் தம் கருணைக் கண் பார்வையைத் திருப்புவாராக.



திருத்தந்தை பிரான்சீஸ அவர்கள் உயர்ப்பு ஞாயிறு தினத்தில் வழங்கப்படும் உரோமை நகரிற்கும் உலகிற்கும் என்ற பகழ் பெற்ற சிறப்பு ஆசீரை இந்த உலக நிலைமையால் முன்கூட்டியே வழங்கி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றி, உலக மக்கள் அனைவருக்காகவும் செபித்துள்ளார். திருத்தந்தையின் முழு உலகிற்குமான இந்த இறைவேண்டலின் பதிலை இறைவனிடம் இருந்து விரைவில் பெற்றுக்கொள்வோம்.

பொய்மையில் இருந்து மெய்மைக்கும், இருளில் இருந்து ஒளிக்கும், சாவில் இருந்து வாழ்விற்கும் அழைத்துச் செல்ல வல்மை பெற்ற இறைவன் உலக மக்கள் அனைவரையும் பாதுகாக்க இறையாசீர் வேண்டுகிறோம்.

# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'தெரு விளக்கு' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப் பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப் படுகிறது.



படம் 2



படம் 3

**இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**

**இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - 'மிருகக் காட்சிசாலை'**

**படம் 1**
அக்ஷா கீர்த்திராஜ் – தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

**படம் 2**
பா. தனுபன்– தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**படம் 3**
பானா ஹர்ஷன் – தரம் 7
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி




அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எம. எம். ஸுமையா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எஸ். அக்ஷன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். ஹரினி - தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

வசந்தரூபன் அபிசன் - தரம் 3
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எம். எச். அல்தாவ் அகமட்
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

பி. அபிஜித் - தரம் 4
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

பி. மயூரி - தரம் 7
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு - தரம் 7
யாழ். இந்து மகளிர் கல்லூரி

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

இ. சிந்தூரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

த. ஆரூசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

ரா. பவிசான் - தரம் 3
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

ஜெயசாந்தன் வித்தியசாகர் - தரம்2
புனித பரியோவான் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

கே. தர்சன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# ஆஸ்திரேலியாவின் பவளப் பாறைகள் பாதிப்பு

## ஆபத்தின் அறிகுறியா?

க.சுபகுணம்

கடலின் சூழலியல் அமைப்பில் மிகவும் முக்கியமான பவளப்பாறைகள் இப்படி பாதிக்கப்படுவது, ஆபத்தான அறிகுறி என்று காலநிலை மாற்ற ஆராய்ச்சியாளர்கள் அஞ்சுகின்றனர்.

ஆஸ்திரேலியாவின் வடகிழக்குக் கரைக்கடலில், 1,100 மைல்களுக்கும் அதிகமான பரப்பளவில் பரவியுள்ள உலகின் மிகப் பெரிய பவளத்திட்டு இது.


உலக வெப்பமயமாதல் காரணமாகப் பவளப் பாறைகள் உலகளவில் அழிந்துவருகின்றன. கடலின் மிக முக்கியமான வளங்களில் ஒன்றான



பவளப்பாறைகள் அழிந்துவருவது, கடலின் ஆரோக்கியம் குறைந்துகொண்டிருப்பதன் அடையாளம் என்கிறார்கள் கடலியல் ஆய்வாளர்கள். இந்நிலையில், உலகிலேயே மிகப்பெரிய பவளப்பாறைப் பகுதியான கிரேட் பேரியர் ரீஃப், மீண்டுமொரு முறை மிகப்பெரிய பவள நிறமாற்றத்தைச் சந்தித்துள்ளது. இதுகுறித்துப் பேட்டியளித்துள்ள கிரேட் பேரியர் ரீஃப் கடலியல் பூங்காவின் மூத்த ஆராய்ச்சியாளர் டேவிட் வேச்சன்ஃபெல்ட், “கடந்த ஐந்து ஆண்டுகளில் இது மூன்றாவது முறை. இந்த முறை நடந்துகொண்டிருக்கும் நிறமாற்றத்தில் இதுவரை பல பவளப் பாறைகள் இறந்துள்ளன” – என்று கூறியுள்ளார்.

### பவளப்பாறைகள்

கடலின் சூழலியல் அமைப்பில் மிகவும் முக்கியமான இந்தப் பகுதி இப்படி பாதிக்கப்படுவது,



ஆபத்தான அறிகுறி!

ஆஸ்திரேலியாவிலுள்ள கிரேட் பேரியர் ரீஃபில் இதற்கு முன், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இதுபோலவே பெரியளவில் நிறமாற்றம் நடந்தது. கடலின் சூழலியல் அமைப்பில் மிகவும் முக்கியமான இந்தப் பகுதி இப்படி பாதிக்கப்படுவது, ஆபத்தான அறிகுறி என்று காலநிலை மாற்ற ஆராய்ச்சியாளர்கள் அஞ்சுகின்றனர்.

தண்ணீரின் வெப்பநிலை வழக்கத்தைவிட அதிகரிக்கும்போது, பவளப்பாறைகள் தங்களுடைய நிறங்களை இழந்து வெள்ளையாகத் தொடங்குகின்றன. இந்த நிறமாற்றத்தைச் சிறியளவிலோ, அதைவிடக் கொஞ்சம் அதிகமாகவோ சந்திக்கும் பவளப் பாறைகள் குணமடைந்துவிடுகின்றன. ஆனால், இந்த நிறமாற்றம் வீரியமிக்கதாக இருந்தால் மீண்டுவருவது சாத்தியமில்லாமல் போகின்றது.

இப்போது கிரேட் பேரியர் ரீஃப் சந்திக்கும் பிரச்சினை குறித்துத் தெரிந்துகொள்ள, நாம் பவள நிறமாற்றம் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முதலில், பவளப்பாறைகளின் செயல்பாடுகள் குறித்து அறிந்துகொள்வோம்.

### பெருங்கடல்

பவளப்பாறைகள் ஆழமற்ற கரைக் கடல் பகுதியில் வளர்பவை. அவை பல வண்ணங்களில் தரை முழுக்க நிறைந்திருக்கும். பெயர்தான் பாறைகளே தவிர அவை உயிருள்ள ஜீவன்கள். ஆனால், ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்துக்கு நகரத்தான் முடியாது. இவை தாவரங்களைப் போன்றவை. ஆனால் தாவரங்களில்லை. இவற்றில் பல வகைகள் உண்டு. கடினப் பவளப் பாறைகள், மெல்லிய பவளப்பாறைகள், காளான் வடிவப் பவளப்பாறைகள் என்று இன்னும் பற்பல வகைகள். கடினப் பவளங்கள் பாறைகளைப் போலவே உறுதியாக இருக்கும். மெல்லிய பவளங்கள் தாவரங்களைப்போல் நீருக்குள் வளைந்து அசைந்துகொண்டேயிருக்கும்.

இப்படியாக பல நிறங்களோடு கயிறுகளைப் போல் வளைந்தும் நீண்டும் பல கிளைகளாகப் பிரிந்தும் தரை முழுவதும் படர்ந்திருக்கும். இத்தனை நிறங்கள் இவற்றுக்கு எப்படிக் கிடைத்தன?

### கிரேட் பேரியர் ரீஃப்

அதற்குக் காரணம், அவற்றைச் சார்ந்து வாழும் மஞ்சள் பாசிகள் (Zooxaanthallaf). பெயர்தான் மஞ்சள் பாசிகள். ஆனால் அவற்றுக்கு மஞ்சள் நிறம் மட்டும் சொந்தமென்றில்லை. பவளப் பாறைகளைச் சார்ந்து இவை வாழ்கின்றன என்று சொல்வது தவறு. இரண்டுமே இணைத்திற உறவுக்காரர்கள் (Symbiotic relations). அதாவது நீயின்றி நானில்லை, நானின்றி நீயில்லை என்பது போல இணைபிரியாதவர்கள். பவளப் பாறைகளின் மேற்புறத் திசுக்களில் வாழும் இந்தப் பாசிகள் ஒளிச்சேர்க்கையின் மூலம் தேவையான உணவை சமைத்துத் தானும் வாழ்ந்து, பவளங்களுக்குத் தேவையான புரதம், கால்சியம் போன்றவற்றைத் தந்து வாழ வைக்கிறது. அதற்குக் கைம்மாறாக ஒளிச்சேர்க்கை செய்வதற்கான ஊட்டச்சத்துகளையும் கரிம வாயுவையும் பவளங்கள் பாசிகளுக்குத் தருகின்றன. இவற்றால் சூரியனிலிருந்து வரும் புறஊதாக்



> உலக வெப்பமயமாதல் காரணமாகப் பவளப் பாறைகள் உலகளவில் அழிந்துவருகின்றன. கடலின் மிக முக்கியமான வளங்களில் ஒன்றான பவளப்பாறைகள் அழிந்துவருவது, கடலின் ஆரோக்கியம் குறைந்துகொண்டிருப்பதன் அடையாளம் என்கிறார்கள் கடலியல் ஆய்வாளர்கள்.

கதிர்களை, அதிக வெப்பத்தை முழுமையாகத் தாங்க முடியாது. அப்படி நேரடித் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருப்பதற்கான கவசமாக இந்த வண்ணங்களைப் பாசிகள் பவளங்களின் உடலில் உருவாக்குகின்றன.

இப்போது, இந்த வண்ணங்களும் அதைச் சுற்றி வாழும் மீன் வளமும் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. அவற்றின் வெளுத்துப்போன எலும்புகள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன.

### பவள நிறமாற்றம்

‘பவளப்பாறைகள் அழிந்துவிட்டால் அவை கரைந்துவிடும் அல்லது அங்கேயே விழுந்து துகள்களாகிவிடும். ஆனால், இவை வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன’ என்று சிலர் சொல்கிறார்கள். உண்மை என்னவென்றால் பவளங்கள் அழிவதற்கு முதல் அடையாளம் தன் நிறங்களை இழப்பது. அதற்கு ‘பவள நிறமாற்றம்’ (Coral Bleaching) என்று பெயர். இரண்டாவது, அவ்விடத்தின் பல்லுயிர்ச் சூழலை இழப்பது. இறுதியில் சொச்சமாக மிஞ்சுவது அவற்றின் எலும்புகள் மட்டுமே. இந்த எலும்புகளைத்தான் இன்னும் வாழ்கிறது என்று சிலர் கூறுகின்றனர். காலநிலை அவசரம், உலக வெப்பமயமாதல் போன்ற பிரச்னைகள் தீவிரமடைந்து வருவதால், கடலின் தட்பவெப்பநிலை அதி



கரித்து கிரேட் பேரியர் ரீஃப் என்ற பவளப்பாறைகளின் சொர்க்க பூமியைச் சுடுகாடாக்கி வருகின்றன.

காற்றுவெளியில் அதிக அளவில் கரிம வாயுக்கள் கலப்பது போலவே, கடற்பரப்பிலும் கரிம வாயு அதிகளவில் கலந்துகொண்டிருக்கிறது. இதனால் நீரின் சமநிலை பாதிக்கப்பட்டு அதில் வாழும் உயிரினங்களுக்கு ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்படுகிறது. பவளப்பாறைகள் அடிப்படையிலேயே உணர்ச்சி மிகுந்தவை. சிறிய மாற்றங்கள் கூட அவற்றைப் பாதிக்கப் போதுமானவை. அப்படியிருக்க இந்த அதீத கரிமவாயு கலப்பினால் கடலின் அமிலத் தன்மை அதிகமாவது, மஞ்சள் பாசிகளின் ஒளிச்சேர்க்கை செயல்பாடு பாதிக்கப்படுவதற்கு வழிவகுக்கிறது. பாசிகள் அழியும்போது அதன் ‘பார்த்தா’ மட்டும் பார்த்துக்கொண்டா இருக்கும். அதுவும் அழிந்துவிடுகிறது. மஞ்சள் பாசிகளின் ஒளிச்சேர்க்கைச் செயல்பாட்டிற்கு கரிம வாயு வேண்டும் என்றும் அதைப் பவளங்கள் நீரிலிருந்து எடுத்து வழங்குகிறது என்றும் மேலே கூறினீர்கள். இப்போது அதேகரிமவாயு அவற்றின் அழிவிற்கு வழிவகுக்கிறது என்று கூறுகிறீர்களே என்ற கேள்வி எழுகிறதா? அனைத்துமே அளவோடு இருக்கவேண்டும். அவற்றுக்குத் தேவைப்படும் கரிமமும்தான்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)



ரஞ்ஜன் அருண் பிரசாத்
(நன்றி :பிபிசி தமிழ்)

# இருபது ஆண்டுகளுக்கு பின்னர் இப்போது சுத்தமான இலங்கை

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் வளிமண்டலத்தில் காற்றுமாசு வீதம் வெகுவாக குறைவடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிக்கின்றது.

அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் சரத் பிரேமசிறி பிபிசி தமிழுக்கு இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் கடந்த 20 வருட கால வரலாற்றில் வளிமண்டல காற்றுமாசு வீதம் வெகுவாக குறைவடைந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக இலங்கையின் பிரதான நகரமாக திகழ்கின்ற கொழும்பை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆராய்வின் ஊடாகவே இந்த விடயம் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொவிட் 19 வைரஸ் தொற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்குடன் இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 20ஆம் தேதி முதல் தொடர் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் காற்றுமாசடையும் வகையிலான செயற்பாடுகள் முழுமையாக முன்னெடுக்கப்படாத நிலையிலேயே இந்த வளிமண்டல காற்றுமாசு வீதம் குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதான நகரங்களில் வாகன போக்குவரத்துக்கள் இடம்பெற்றாத நிலையில், காற்றுமாசடைவது வெகுவாக குறைவடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பகுதியில் தற்போதுள்ள வளிமண்டல காற்றுமாசு வீதம் குறித்து அவதானிக்கும் போது, மிகவும் சிறிய தூசியாக கருதப்படும் பி.எம். 2.5 தூசி மைக்ரோ கிராம் 10ஆகவே காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பி.எம். 10 தூசி மைக்ரோ கிராம் 20 ஆகவே கொழும்பு நகரில் காணப்படுகின்றது என நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் சரத் பிரேமசிறி கூறினார்.

குறிப்பாக கொழும்பு நகரில் கடந்த 20 வருடங்களில் பதிவான மிக குறைந்த காற்று மாசு வீதமாகவே தான் இதனைக் கருதுகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்புநகர்மாத்திரமன்றி, ஏனையநகரங்கள் தொடர்பில் ஆராயும் போது, கொழும்பு நகருக்கு சமனான வகையில் காற்றுமாசு வீதம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் காற்றுமாசு வீதம் மிகவும் குறைந்தவொரு காலப் பகுதியான இது வரலாற்றில் இடம்பிடித்துள்ளதாக கூற முடியும் என சரத் பிரேமசிறி குறிப்பிட்டார்.

இலங்கையில் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள காலம் முழுவதும், காற்றுமாறு வீதம் இவ்வாறான நிலையிலேயே காணப்படும் என தாம் எதிர்பார்க்கிறார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன்னரான நிலை தொடர்பிலும் அவர் தெளிவூட்டல்களை வழங்கினார்.

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் மிகவும் சிறிய தூசியாக கருதப்படும் பி.எம் 2.5 தூசி மைக்ரோ கிராம் 50ஆக காணப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினார்.

**கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதான நகரங்களில் வாகன போக்குவரத்துக்கள் இடம் பெற்றாத நிலையில், காற்றுமாசடைவது வெகுவாக குறைவடைந்துள்ளது. கொழும்பு பகுதியில் தற்போதுள்ள வளிமண்டல காற்றுமாசு வீதம் குறித்து அவதானிக்கும் போது, மிகவும் சிறிய தூசியாக கருதப்படும் பி.எம். 2.5 தூசி மைக்ரோ கிராம் 10ஆகவே காணப்படுகின்றது**

மார்ச் மாதம் 11ஆம் தேதி முதல் காற்றுமாசு குறைவடைந்து வந்த நிலையில், மார்ச் மாதம் 15ஆம் தேதி முதல் காற்று மாசு வீதம் மிக வும் குறைவடைந்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

### வரலாற்றில் காற்றுமாசு அதிகரித்திருந்த காலம் எது?

2002ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையான 10 வருட காலங்களில் காற்று மாசு வீதம் அதிகரித்திருந்த தாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.



எனினும், 2012ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப் பகுதியில் காற்றுமாசு வீதம் குறைவடைந்திருந்ததை அவதானிக்க முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், கடந்த ஆண்டு இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், 75 சதவீத காற்றுமாசு வீதம் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

2012ஆம் ஆண்டுக்கு பின்னர் காற்றுமாசு வீதம் குறைவடைய காரணம்?

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் வாகன போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே 2012ஆம் ஆண்டுக்கு பின்னர் காற்றுமாசு வீதம் குறைவடைய பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையை கண்காணிக்கும் நடவடிக்கைகளை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் முன்னெடுத்திருந்ததாகவும் சரத் பிரேமசிறி நினைவூட்டினார்.

அதுமாத்திரமன்றி, வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டமையும் காற்று மாசடைவது குறைந்து காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு 2012ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிநவீன வகையிலான ஐபிரிட் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், அதனால் வளிமண்டல காற்றுமாசடைவது குறைவடைந்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், பிரதான நகரங்களில் வாகன போக்குவரத்து வீதம் அதிகரித்த பின்னணியில் 2014ஆம் ஆண்டுக்கு பின்னர் காற்று மாசு வீதம் சற்று அதிகரித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

### இந்த நிலைமையை முன்னோக்கி கொண்டு செல்ல முடியுமா?

அனல் மின் உற்பத்தி நிலையங்கள், குப்பைகளை எரித்தல், வீட்டு உரிமையாளர்களின் செயற்



பாடுகளினாலேயே தற்போது சற்று காற்று மாசடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது என சரத் பிரேமசிறி குறிப்பிட்டார்.

எனினும், இந்த நிலைமை காலநிலை மாற்றத்தினால் மாற்றமடையும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வாகன போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டுள்ளமையினாலேயே காற்றுமாசு வீதம் குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், வாகன போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பட்சத்தில், காற்றுமாசு வீதத்தையும் எதிர்காலத்தில் குறைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் கூறினார்.

காற்றுமாசு வீதத்தை குறைக்கும் வகையிலான திட்டங்கள் அடங்கிய அறிக்கைகளை தாம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாகவும், எதிர்காலத்தில் காற்றுமாசு வீதத்தை குறைக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.



# இந்த நெருக்கடியான சூழலில்

# அண்டார்டிகாவில் நடப்பது என்ன?

பரவலாகத் தொற்றும் கொள்ளை நோயாக உலகம் முழுவதும் கொரோனா அறிவிக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுதலும் எல்லைகளை மூடிப் பாது காத்தலும் அறிவுறுத்தப்படுகின்றன. குறுகிய கால கட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய மிகவும் இன்றியமையாத நடவடிக்கைகள். முன்னெச்ச ரிக்கைகள் கிடைக்காமல் விளைவுகளைக் கண்டு விபரீதங்களைத் தடுக்க, நிறுத்த முனைந்திருக் கிறோம். அல்லது கிடைத்த ஒருசில முன்னெச் சரிக்கைகளைக் கவனிக்கத் தவறிவிட்டோம்.

பருவநிலை மாற்றங்களும் உலகம் முழுவ தும் பரவிக்கொண்டிருக்கும் நேரம் இது. அதன் விளைவுகளும் ஜீரணிக்கக்கூடியவை அல்ல. உலகம் வெப்பமயமாகிக் கொண்டுவருகிறது. கடல் நீர் அளவும் உஷ்ணமும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. நீரளவு அதிகரித்தால் சில நகரங்கள் மூழ்கலாம் அல்லது வெள்ளத் தால் தத்தளிக்கலாம். பல உயிரினங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. தத்தம் இருப்பிடத்தி லிருந்து சில உயிரினங்கள் மறைந்துகொண்டிருக் கின்றன. காடுகளில் தீ ! சுனாமி..! இன்னும் எவ்வ ளவோ.! உடனடியாக ஏற்படாமல் ஒவ்வொன்றாக வந்துகொண்டிருக்கும் இடர்பாடுகள்...

ஆனால் புவி (கொரோனா போல் இல்லாமல்) நீண்டகாலமாக முன்னெச்சரிக்கைகளைத் தந்து கொண்டுதான் இருக்கிறது. இயற்கைக்கு எல்லைகள் கிடையா. வேலிகொண்டு அடைக்க இயலாது. தனி மைப்படுத்தவும் முடியாது. சீற்றங்கள் வெளிப் பட்டுக்கொண்டுதான் இருக்கும். இந்த விளைவுக



ளைக் கட்டுப்படுத்தவோ நிறுத்தவோ தீவிரமாக முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோமா என் பதுதான் இப்போதைய கேள்வி.

எச்சரிக்கை சத்தங்களை ஒருசேர வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இடம் அண்டார்டிகா. உலகின் தென் கோடியில் ஆள் அரவம் இல்லா தென் துருவக் கண்டம் என அசாதாரணமாக இருந்துவிட முடியாது. அண்டார் டிகாவில் நிகழும் வெளிப்படைப் பருவநிலை மாற் றங்கள் பெரிய அளவில் உலகின் மற்ற பகுதிகளுக்கும் விபரீதத்தாக்கங்களைத்தர வல்லன,தந்துகொண்டிருக் கின்றன. எப்படியிருந்த கண்டம் எப்படி ஆகிக்கொண் டிருக்கிறது நாம் என்ன செய்ய வேண்டும் என்பனவற் றைக் கொஞ்சம் பார்ப்போம்...

ஜி குமார்

ஆர்க்டிக், அண்டார்க்டிக் ஆகிய இரண்டும் துருவப் பிரதேசங்கள் எனினும் அண்டார்டிகா அதிகக் குளிர் வாய்ந்த பகுதி. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது ஆர்க்டிக் ஒரு உறைந்த கடல். அண்டார்டிகா ஒரு கண்டம். பனியால் மூடப்பட்ட நிலப் பகுதி. ஆர்க்டிக் பிரதேசத்தை விட எட்டு மடங்கு அதிகம் உறைந்த பனி அண்டார்க்டிக்கில் உள்ளது. கடலால் சூழப்பட்டிருந் தாலும் அண்டார்க்டிக் கண்டத்தின் உள் பகுதிகளுக்கு நீர் தரக்கூடிய சேமித்த வெப்பம் பரவ வாய்ப்புகள் இல்லை. மேலும் குளிர்காலங்களில் கண்டத்தைச் சுற்றியுள்ள கடல் நீர் உறைவதால் கடல்பனி வெகுதூரம் பரவுகிறது. ஏன்...அதனால் அக்காலங்களில் கண்டத் தின் பரப்பளவே இரட்டிப்பாகிறது. அதனால் கண்டத்தில் வெப்ப நீரோட்டங்கள் தரக்கூடிய விளைவுகளும் இருந்ததில்லை. கோடையில் சூரிய ஒளி அதிகம் விழுந்தாலும் கண்டத்தை மூடிய பனி எண்பது விழுக் காட்டிற்கும் அதிகமான ஒளிக்கற்றைகளைத் திருப்பி அனுப்பிவிடுகிறது. மேலும் கண்டத்தின் சராசரி உயரமும் அதிகம்.

கோடையிலும் கண்டத்தின் உட்புறம் சராசரி வெப் பம் சைபர் டிகிரியைத் தாண்டியதில்லை. தென்துருவத் தில் கண்ட மிகக்குறைந்த அளவு வெப்ப அளவு மை னஸ் 82.3 டிகிரி ஜுன் 1982 . ஆனால், உலகின் மிகக்குறைந்த வெப்ப அளவு மைனஸ் 89.6 டிகிரி ஜுலை 1983 . வோஸ்டாக் என்ற அண்டார்க்டிகாவின் ரஷ்ய நிலையத்தில் எடுக்கப்பட்டது. கரையோரப் பகுதி களில் அதுவும் வடபுறம் மூக்கை நீண்டிக்கொண்டி ருக்கும் தீபகற்பப் பகுதியில் கோடையில் சில நாள் களில் வெப்பம் அதிகமாகலாம். அப்பகுதியில் அதி கபட்சமாகப் பதினைந்து டிகிரி சென்டிகிரேட் வரை எப்போதோ உயர்ந்திருக்கிறது.

பிப்ரவரி 6ம் தேதி 2020ல் அண்டார்க்டிகாவில் அதிகபட்சமாக 18.3 டிகிரி வரை வெப்ப அளவு சென் றிருக்கிறது. ஒப்பீட்டளவில் பார்த்தோமானால் அமெ ரிக்காவின் லாஸ் ஏஞ்சல் ஸ் நகரிலும் அந்த நேரத் தில் அதே வெப்ப அளவே பதிவாகியிருக்கிறது. புவி வெப்பமயமாகுதலுக்கு அண்டார்க்டிகா தந்திருக்கும் சைகைகளில் இது ஒன்று.

அண்டார்க்டிக் கண்டத்தின் மேற்புறம் அமைந்துள்ள பனியின் தடிமன் கிட்டத்தட்ட மூன்று மைல் அளவு அதிகம். அதாவது உலகிற்குத் தேவையான சுத்த நீரின் தொண்ணூறு விழுக்காடு அண்டார்க்டிகா கண்டத்தில் உள்ளது. உஷ்ணக் காற்றும் வெப்பக்கடல் நீரும் கண்டத்தின் வெப்ப அளவை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. வெப்ப அளவு அதிகரிப்பு உறைந்த பனியை உருக வைத்துள்ளது.

அண்டார்க்டிகாவில் 1980களில் இருந்ததைவிட தற்போது பனி உருகுதல் ஆறு மடங்கு உயர்ந்துள்ள தாகத் தெரிகிறது. உருகும் பனி உலகின் கடலளவை பத்து அடிகள் வரை உயர்த்தலாம் என அறிஞர்கள் அஞ்சுகின்றனர். கடலோரத்தில் உள்ள முக்கிய நகரங்களின் நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்...

பனிக்கட்டி ஆறு க்ளேசியர் Glacier, பனிச் சுவர் IceShele , மிதக்கும் பனிப் பாறைகள் Icebergs ஆகியவை அண்டார்க்டிக் கண்டத்துடன் அதிகத்



தொடர்புடையவை. அண்டார்க்டிக் போன்ற குளிர்ப்பிர தேசங்களில் குளிர்காலத்தில் உறை பனி வீழ்ச்சி snow fall அதிகமா கிறது. வெப்பம் குறைவாக இருப்பதால் வீழ்ந்து உறைந்த பனி அதிகம் உருகு வதில்லை. வருடங்கள் கழிகையில் அவ் வாறு சேகரிக்கப்பட்ட உறைபனி பெரும் குன்றுகளாக மாறலாம். எடையும் அதி கரிப்பதால் கீழ்ப்புறத்தில் உள்ள பனி உருகத்தொடங்குகிறது. அவ்வாறு உரு கிய பனி ஆறாய் வடியத் தொடங்குகின் றன. இவை ஒரு திட வடிவ ஆறுகள்: வேகம் மிகக்குறைவு. சில அடிகளே ஒரு நாளில் நகரலாம்.

பனிக்கட்டி ஆறு கண்டத்திலிருந்து கடலில் விழும்போது கண்டத்தை ஒட்டிக் கொண்டு கண்டத்தின் ஒரு பாகமாவே அமைந்துள்ள மிதக்கும் பெரும் பனிச் சுவர் போன்ற பகுதிகளுடன் இணைய லாம். அல்லது பனிப்பாறைகளாய்க் கடலில் விழுந்து நகரலாம்.

பல அடிக்கணக்கில் பிரமாண்டமாய் உயர்ந்து நிற்கும் அப்பனிச் சுவர்களின் சில பகுதி கள்கண்டத்திலிருந்துபிரிந்துமிதக்கும்பனிப்பாறைகளாய் மாற வும் வாய்ப்புகள் அதிகம். அவ்வாறு பிரிந்த சில பகுதிகள் பல கப்பல்களைவிட பெரிதான அளவில் இருந்து பனிமலையே பிரிந்து வந்ததுபோன்ற தோற்றத்தை உண்டு செய்யும். கப்பலுடன் மோதிக் கப்பலை உடைக்கவும் அந்த மிதக்கும் பாறைகளுக்கு வலுவுண்டு. டைட்டானிக் கப்பல் மூழ்கிய பிறகு உலக அளவில் ஐஸ்பெர்குகளைக் கண்டறிந்து தகவல் வெளியிடவே ஒரு கழகம் நிறுவப்பட்டுள்ளது. அண் டார்க்டிகாவை நெருங்க நெருங்க இருபுறமும் மிதக்கும் அப்பனிப் பாறைகளைத் தாழ்வாரமாய்ப் படரவிட்டு கப்பல் முன் னேறுவது ஒரு அற்புதக்காட்சி!

மிதக்கும் பனிப்பாறைகள் வெள்ளையும் வெளிர் நீலமுமாய்க் கலந்தே காணப்படும். தூய நீரின் அடர்த் திக்கும் 0.925 கடல் நீரின் அடர்த்திக்கும் 1.025 உள்ள வேறுபாடு காரணமாகப் பனிப்பாறைகள்



மிதக்கும்போது பத்தில் ஒன்பது பாகம் நீர் மட்டத்தின் கீழ் இருக்கும். ஆங்கிலப் பழமொழி 'டிப் ஆஃப் ஐஸ்பெர்க்' இதிலிருந்தே தோன்றியது.

### பிரச்சினைக்கு வருவோம்

பல தேசங்களின் விண்வெளி ஆராய்ச்சிகள் பூமி யில் அவ்வப்போது நிகழும் மாற்றங்களைத் தெரிவித்து வருகின்றன. ஒருமித்த கருத்தாக அவை பெரும்பாலும் குறிப்பிடுவது அண்டார்க்டிகாவின் த்வைட்ஸ் Thwaites பனி ஆற்றில் நிகழ்ந்து வரும் மாற்றங்களைத்தான்.

த்வைட்ஸ் பனி ஆறு மிகப் பெரியது. கண்டத்தின் மேற்குப் புறம் அமைந்துள்ளது. இங்கிலாந்தின் பரப் பளவை ஒத்தது. கடலின் அதன் வடிகால் சுமார் 120 கிமீ நீளமுடையது. அதன் படுகை கடலின் அடிப்புறம் ஆயிரம் மீட்டர்கள் வரை நீடிக்கிறது. த்வைட்ஸ் பனி ஆறு கடந்த நூற்றாண்டில் சுமார் 600 பில்லியன் டன் எடையுள்ள பனியை இழந்துள்ளது. ஆனால் கடந்த சில வருடங்களிலேயே சுமார் 50 பில்லியன் டன் எடை பனியை த்வைட்ஸ் பனி ஆறு இழந்துள்ளது. சுமார் இரண்டு டிகிரி வெப்பமுள்ள கடல் நீர் இந்தப் பனி ஆற்றின் கீழே வருவதே இதற்கு மூலக்காரணம். இந்தப் பனி உருகுவது மட்டுமே 4 விழுக்காட்டிற்கும் அதிகமான உலகின் கடல் நீர் உயர்வுக்குக் காரணம்.

கண்டத்தை அடையும் முன்னர் கடலைச் சுற்றிப் படர்ந்திருக்கும் உறைபனி அதிகத் தடிமன் இல்லாமல் மிதக்கும் பனித்தகடுகளாய்க் காணப்படும். புவி வெப்பமயமாகுதல் இன்னும் இருபது முதல் இருபத்தி ஐந்து வருடங்களில் இந்தப் பகுதியை இல்லாமல் செய்துவிடும் என்பதும் வல்லுநர்களின் கருத்து.

அண்டார்க்டிகாவின் உயிரினங்கள் குளிர், அதி கம் குளிர்ந்த கடல் நீர், கடல் பனித்தகடுகள், கண்டத் தின் உறைபனி ஆகியவற்றைச் சார்ந் துள்ளன.

அண்டார்க்டிகா என்றவுடனேயே குழந் தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவர் மனதிலும் வருவது பெங்குவின்கள்தான். பெங்குவின்களைத் தவிர சீல், திமிங்கலம், ஸ்குவா என்னும் பறவை, கிரில் என்ற ஷ்ரிம்ப் போன்ற உயிரினங்கள் இவற்றில் முக்கியமானவை.

பெங்குவின்களில் பதினேழு வகைகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டாலும் அவற்றில் முக்கியமானவை அடிலி, எம்பரர் பெங்குவின் ஆகியவைதான். பெங்குவின்கள் பெரும்பாலும் ருக்கெரிகள் rookeries என்னும் காலனிகளில் கூட்டங்கூட்டமாய் வாழ்கின்றன. கடல் மீன்களும் கிரில் உயிரினமும் இவற்றின் உணவுகள்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# உயிர்த்த ஞாயிறும் கொரோனாவும்!...



(09 பக்கத் தொடர்ச்சி...)

பயங்கரவாதத்தை முறியடிப்பதற் கும் போதைவஸ்தை முற்றாக தடுப் பதற்கும் புதிய புதிய சட்டங்களை நாடாளுமன்றத்திற்கு பரிந்துரைத்த எதிரணி அரசியல் தலைவர்கள், சமீப காலமாக கொரோனோ அச்சுறுத்தலைகவனத்தில்கொண்டு மக்களின் நலன்களுக்காகவும் தேவைகளுக்காகவும், கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றை மீண்டும் கூட்டுமாறு வலியுறுத்தி வரு கிறார்கள். நாட்டின் அதிபரோ, பிரதமரான அவரது அண்ணனோ, அந்தக் கோரிக் கையை அலட்சியம் செய்கின்றனர்.

நல்லாட்சிஎன்றபெயரில்தொடங்கப்பட்ட முன்னைய ஆட்சிக்காலத்தில் அப்போதிருந்த அதிபரும் பிரதமரும் நடத்திய சடுகுடு விளையாட்டு உலகப் பிரசித்தம்! அந்த நல்லாட்சி கேலிக் கூத்தாக முடிவுக்கு வந்து, புதிய அதிபர் வந்துவிட்டார். அவர் பதவி ஏற்று சில மாதங்களில் கண்ணுக்குத் தெரிந்த எதிரி வந்து பல்கிப்பெருகிவிட்டான்.

கடந்த ஆண்டு உயித்த ஞாயிறு தினத்தில் தோன்றிய கண்ணுக்குத் தெரிந்த எதிரிகளை பிடிக்கமுடியாமல் கோட்டைவிட்டவர்தான் பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு பொறுப்பாக இருந்த நாட்டின் அதிபர் (முன்னைய அதிபர்), பிரதமருடன் (முன்னையவருடன் ) ஆலோசிக்கத் தவறிவிட்டார்என்றும்-பொறுப்பான அமைச்சர் ஒருவர் அளித்த தகவலை பாதுகாப்புத்துறை யினரும் பொலிஸாரும் பொருட்படுத்தவில்லை என்றும் ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம்.

கடந்த ஆண்டு நடந்துள்ள சம்பவங்களை விசாரிக்க மூன்று முன்னாள் நீதியரசர்கள் தலைமையில் ஆணைக்குழுவை முன்னாள் அதிபர் நியமித்தார். சம்பவத்தின் சூத்திரதாரிகள் என சந் தேகத்தின் பேரில் பலர் கைதாகினர். இந்த கைது ஓராண்டுக்குப்பின்னரும் தொடருகிறது. ஆனால், அன்றைய நாடாளுமன்ற தெரிவுக்குழு நடத்தியவிசாரணை அறிக்கைதற்போது கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

அதனைப்பற்றி எவரும் தற்போது பேசமுடியாமல், கொரோனோ பேசு பெருளாகிவிட்டது!

கொரோனாவைரஸினால்உயிர் நீத்த இஸ்லாமியர்களை அவர்களின் மார்க்கத்தின் நடைமுறைப்படிதான நல்லடக்கம் செய்ய வேண்டும், தகனம் செய்துவிடக்கூடாது என்று இலங்கை இஸ்லாமிய அரசியல்தலைவர்கள் அதிபரிடமும் பிரதமருடனும் சுகாதார அமைச்சரிடமும் வலியுறுத்துவதுதான் பேசுபொருளாகியிருக்கிறது.!

2009ஆம்ஆண்டிற்குப்பின்னர் இலங்கை கடந்த 2019 ஆம் ஆண்டில், உலகின் கவனத்திற்குள்ளாகியிருந்த போது, வெளிநாட்டு உல்லாசப்பய ணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட் டது,

அவர்களின் வருகையை மீண்டும் ஊக்குவிப்பதற்காக, இலங்கை அரசு பல நாடுகளுக்கு விசா அனுமதியை கட்டணம் இன்றி வழங்கியது. ஆனால் இப்போது ஓராண்டுக்குள் வெளிநாட்டினரே வரமுடியாதளவுக்கு விமான நிலையங்கள் இலங்கை உட்பட எங்கும் தற்போது மூடப்பட்டுக்கிடக்கின்றன.

அரசியல் கட்சிகள், வரவிருக்கும் தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டு, பிரசார உத்தியாக மக்கள்மத்தியில்உலர்உணவு விநியோகத்தில் ஈடுபட முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் எச்சரித்துள்ளார்! தேர்தல் நடக்குமா..? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முனையாமல், தேசத்தின் எதிர்காலத்தின் நலன்கருதி பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயற்படவேண்டிய காலம் வரவேண்டும் என்று ரீமான் பொதுஜனம் அன்று 2019 இல் கேட்டுக்கொண்டதுபோல், இன்று 2020 இலும் எங்கள் தேசம் சமகாலத்தில் முகம்கொடுத்துவரும் பாரிய அச்சுறுத்தலிலும் அரசியல் ஆதாயம் தேடவேண்டாம் என்று தற் போது வலியுறுத்துகிறார்.

வெளிநாட்டிலிருக்கும் இலங்கையர் தாயகம் திரும்பி, மூலதனமிட்டு தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்கலாம். வாருங்கள். வந்து எங்கள் தேசத்தின் முன்னேற்றத்திற்கு உதவுங் கள் என்று இலங்கை முன்னாள் அரச அதிபர் மைத்திரி மற்றும் சில மாகாண ஆளுநர்களும் கடந்த காலங்களில் தெரிவித்து வந்தார்கள்.

தேயிலை, ரப்பர், கொக்கோ, தெங்கு முதலான ஏற்றுமதி வர்த்தகத்தில் பாரிய பின்னடைவுகளை சந்தித்திருக்கும் எங்கள் தேசம், உல்லாசப்பயணிகளை கவருவதற்காகவும்சிலதிட்டங்களைஉருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு எண்ணியிருந்த காலப்பகுதியில்தான் அன்றைய உயிர்த்த ஞாயிறு உயிர் குடித்த ஞாயிறாக மாறியிருந்தது!

ஆனால், இன்றோ, எவரும் வர வேண்டாம் என்று சொல்ல வேண்டிய தேவை வந்துள்ளது! என்தேவனே! என்தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று முறையிட்டு சிலுவையில் அறை யப்பட்டு, அன்றையதினம் உயிர் தெழுந்த யேசு பிரானை வணங்கச் சென்ற அந்த மக்களின் மரண ஓலமும் அதே தொனியில் என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கை விட்டீர்?" என்று உள்ளுணர்வில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

இன்று மீண்டும்அதேதேவனிடத்தில், உலக மக்கள் அனைவரும் உயிரைக் கையில் பிடித்தவாறு வீடுகளுக்குள் முடங்கியிருந்து ஏன் எம்மை கைவிட்டீர்? எனக் கேட்கின்றனர். எங்கள் தேசம் மட்டுமல்ல முழு உலக மும் சிலுவையில்தான் அறையப்பட்டுள்ளது! எப்போது உயிர்த்தெழும்? முழு உலகமும் கடக்க வேண்டிய நெருக்கடியான தூரம் இன்னும் அதிகம்தான்!

## அண்டார்டிகா...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

பெங்குவின் வகைகளில் அதிக உயரமும் எடையும் கொண்டது எம்பரர் பெங்குவின்கள். பெரும்பாலும் கடலோரப்பகுதிகளில் பனித்தகடுகளில் வசிக்கின்றன. வெப்பமயமாகிக்கொண்டிருக்கும் பூமி கண்டத்தை ஒட்டியுள்ள பனித்தகடுகளை அழித்து வருகின்றன.

வசிக்க அதிகம் இடமில்லாத எம்பரர் பெங்குவின் குஞ்சுகள் சீல், திமிங்கலத்துக்கு இரையாகின்றன. இந்த இனம் இப்போது அழியப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

பெட்ரோலியம் எரிபொருள்கள் அதிக கரியமிலவாயுவை கார்பன் டை ஆக்சைடு உமிழ்கின்றன. கடல் நீர் அவற்றை உள்வாங்கி அமிலத்தன்மையை எய்யத்தொடங்கியுள்ளன.

கால்சியத்தை நம்பியுள்ள அனைத்துநடவடிக்கைகளும் கடலில் குறையத் தொடங்கியுள்ளன. சீல், திமிங்கலம் போன்றவற்றுக்கும் உணவுத் தட்டுப்பாடு எழலாம்.

உலக பருவநிலைக் கட்டுப்படுத்தி வைக்கும் ஆற்றல் துருவப் பிரதேசங்களுக்கு உள்ளது ஏன்றால் அது மிகையல்ல. ஆர்க்டிக்கும் ஆண்டார்க்டிகாவும் உலகின் குளிர் சாதனப் பெட்டிகள்.

இதில் அண்டார்க்டிகாவின் பங்கு அதிகமானது. புவியின் கூக்குரல்களை நாம் இப்போதாவது செவிமடுத்துக் கேட்டு உடனடியாக ஆவன செய்வது நமது கடமையாகிறது. நீரைச் சேமிப்போம். பிளாஸ்டிக் உபயோகத்தைக் குறைப்போம். மரங்கள் வளர்ப்போம். பெட்ரோலியம் எரிபொருள்கள் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைக்கத் தொடங்குவோம்.

விளைவுகள் விபரீதமாகும்போது முகமூடிக் கவசமோ தனிமைப்படுத்தலோ நம்மைக் காக்க முடியாது.

## ஆஸ்திரேலி...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயிரக்கணக்கான கடல் வாழ் உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு கிரேட் பேரியர் ரீஃப் தான் அடிப்படையாக விளங்குகின்றது. அதோடு, டார்ரெஸ் தீவுகளில் வாழும் பூர்வகுடிச் சமூகங்களின் வாழ்வாதாரத்தில் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.

### கடலியல் ஆராய்ச்சியாளர்கள்

பல ஆண்டுகளாகவே, கிரேட் பேரியர் ரீஃப் இந்தப் பிரச்னையைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றது. அவை அழியும் வேகம் அதிகரித்துக்கொண்டிருப்பது குறித்து ஆய்வாளர்களும் பல ஆண்டுகளாகவே எச்சரிக்கை மணி அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவை அழியும் வேகத்தோடு ஒப்பிடுகையில் வளரும் வேகம் மிகவும் குறைவு. ஐந்தே ஆண்டுகளில் மூன்று முறை பெரியளவிலான பவள நிற மாற்றத்தைச் சந்தித்துள்ளன என்பது மற்றுமோர் எச்சரிக்கை மணியாகப் பார்க்கப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான கடல் வாழ் உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு கிரேட் பேரியர் ரீஃப் தான் அடிப்படையாக விளங்குகின்றது. அதோடு, ஆஸ்திரேலியாவுக்கும் நியூ கினியாவுக்கும் இடையேயுள்ள டார்ரெஸ் தீவுகளில் வாழும் பூர்வகுடிச் சமூகங்களின் வாழ்வாதாரத்தில் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. கூடுதலாக, மீன்பிடித்தல், சுற்றுலாத்துறை போன்றவற்றிலும் இவற்றின் இருப்பு பேருதவி புரிகின்றன. சூழலியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெரும் சேவை புரியும் இந்தப் பவளத் திட்டுகள் பேரழிவைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன.

### பவளப்பாறைகள்

ஆஸ்திரேலியாவின் வடகிழக்குக் கரைக்கடலில், 1,100 மைல்களுக்கும் அதிகமான பரப்பளவில் பரவியுள்ள உலகின் மிகப் பெரிய பவளத்திட்டு இது. இதுவரை ஆய்வு செய்யப்பட்டதில் 80 சதவிகிதப் பவளப்பாறைகள் நிறமாற்றத்திற்கு ஆளாகிவிட்டன என்று மூத்த ஆராய்ச்சியாளர் வேச்சன்ஃபெல்ட் கூறியுள்ளார். ஏற்கெனவே, 40 சதவிகிதப் பாறைகள் மோசமான மற்றும் மிக மோசமான நிலையில்தான் இருந்துவருகின்றன. ஆகவே, மூன்றாவது முறையாக நிகழ்ந்துள்ள இந்த நிறமாற்றத்திலிருந்து அவை உயிர் பிழைப்பது எளிய காரியமல்ல என்று அஞ்சுகின்றனர்.

ஆஸ்திரேலிய அரசு, இதைச் சரிசெய்யத் தொடர்ந்து போராடி வருகின்றது. இப்போது அவற்றை மீட்டுக்கொண்டுவரப் போராடுவது வேண்டுமானால் ஆஸ்திரேலியா மட்டுமாக இருக்கலாம். ஆனால், அவை இந்த நிலைக்கு ஆளாக அனைத்து நாடுகளுமேதான் காரணம். அனைவரும் வெளியேற்றிய பசுமை இல்ல வாயுக்களே உலக வெப்பமயமாதலுக்குக் காரணம். உலக வெப்பமயமாதலே பவளப் பாறைகள் அழிவுக்குக் காரணம்.

## எல்லாமே அரசியல்...

(08 ஆம் பக்கம் பார்க்க..)

காரணம் கூறப்படவில்லையாயினும் நிலைமை கட்டுப்பாட்டை மீறுவதே காரணமாக இருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.

இங்குள்ள மூத்தோர் பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருந்த 88 பேர் ஒரு வாரத்துக்குள் மரணமானது அதிர்ச்சியளித்துள்ளது. மருத்துவ நிலைய குறைபாடுகளே இதற்குக் காரணமென கண்டறியப்பட்டுள்ளதால் பலர் தமது உறவினர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

அவசர அவசிய தேவைகளுக்கு உதவ இராணுவம் தயார் என்று பிரதமர் அறிவித்து ஒரு வாரமாகியும், கியுபெக் மாகாணம் தவிர மற்றைய மாகாணங்களில் அவர்கள் களமிறக்கப்படவில்லை. கனடிய மனித உரிமைச் சாசனமே இதற்குத் தடையாகவுள்ளதாம்.

இந்தச் சாசனத்தின்படி மாகாண அரசாங்கங்கள் கேட்காதவிடத்து ராணுவத்தைக் களமிறக்க மத்திய அரசுக்கு அனுமதியில்லை. இராணுவத்தைக் கேட்டுவிட்டால் அடுத்த தேர்தலில்தங்களைப்பாதிக்கலாமெனமாகாண அரசுகள் எண்ணுகின்றன. மாகாண அரசுகள் கேட்காதவிடத்து ராணுவத்தை அனுப்பினால் எதிர்க்கட்சிகள் தங்களைப் பதம் பார்த்துவிடுமென ரூடோ அரசு கருதுகிறது.

இதுவும்கூட இன்னொரு வகை அரசியல். ஆடு - புலி விளையாட்டுப் போன்ற இந்த அரசியலில் சிக்கித் தவிப்பது அப்பாவி மக்களே.

மறுதரப்பில், காலம் கடந்த நிலையிலும், அவசர கால விதிகளை அமுல் செய்ய ரூடோ அரசு கருதுவதை அவர்களின் உள்ளக ஆவணமொன்று வெளிப்படுத்தியுள்ளது. இதனை மாகாண அரசுகளுக்கு அனுப்பி அவர்களின் கருத்தைப் பெற ரூடோ அரசு விரும்புகிறது.

1988ல் உருவாக்கப்பட்ட அவசர கால விதிகள் அமுலுக்கு வருமானால் போக்குவரத்துத் தடை, பொதுச் சொத்துகளை பயன்படுத்துவது, அத்தியாவசிய சேவைகளை நேர்ப்படுத்துவது, பொதுச் சேவைகளை சீராக்குவது, அத்தியாவசிய தங்கிடங்களையும் வைத்தியசாலைகளையும் அமைப்பது, சகல மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்துவது என்பவை மத்திய அரசின் கைகளுக்குச் செல்லும்.

தற்போதைய நெருக்கடி நிலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமென்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாத பிரதமர், கொரோனாவுக்கான தடுப்பூசி கிடைக்கும்வரை தற்போதைய நிலை தொடருமென எச்சரித்துள்ளார்.

இவ்வாறான கட்டத்தில் அவசரகால விதிகளை அமுல்படுத்த மாகாண அரசுகள் சம்மதமளிப்பது உகந்ததாக அமையலாம்.

ஆனால், அவர்களின் பின்னால் மறைந்திருந்து வழிநடத்தும் அரசியல் இதற்கு இடங்கொடுக்குமா என்பது கேள்விக்குறி.

ஜனநாயகமென்பது அவசர கால வேளைகளில் சிறிதளவாவது ஒருநிலை முடிவெடுப்பதாக இருக்க வேண்டும். மக்கள் மரணித்து நாடு சுடுகாடான பின்னர் அரசியலைக் கையிலேந்துவதில் பயனில்லை. இப்போதைய காலம் போர்க்காலம் போன்றது. நடவடிக்கைகளும் அமுல்படுத்தல்களும் அவ்வாறே அமைய வேண்டும். இல்லையேல் கொரோனாவே நிரந்தரவாசியாகி அனைத்தையும் ஆட்சி புரியக்கூடும்.

# தோட்டத் தொழிலாளர்களின் தினசரிச் சம்பளம் ரூ.1,000 ஆக உயர்த்த முடியாமல் போனதேன்?

## மனம் திறக்கின்றார் மனோ கணேசன்

கொழும்பு,ஏப்.12

மலையக தொழிலாளிக்கு, யாரும் புதிதாக ஆயிரம் ரூபாய் தரத் தேவையில்லை என்றும் துண்டுவிழும் 240 ரூபாயைத்தான் தரவேண்டும் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அப்பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இப்போது தொழிலாளிக்கு கிடைப்பது 760 ரூபாய். 1,000 ரூபாயில் துண்டு விழும் தொகையான 240 ரூபாயில் முதலில் 140 ரூபாயையும் பின்னர் 100 ரூபாயையும் அடுத்ததாக 50 ரூபாயையும் தருவுதற்கு நாங்கள் முயன்றோம். எனினும் அது முடியாமல் போய்விட்டது.

கடந்த நான்கரை வருடங்களில், எத்தனையோ விடயங்களில் மலையகத்தை, தேசிய அரங்கில் தூக்கி நிறுத்தினோம். இந்தச் சம்பள சிக்கல்தான் முடியாமல் போனது. அதை ஒப்புக்கொள்கிறோம். அதற்காக வருந்துகிறோம். ஆனால், அன்றைய தவறு இன்றைய தவறுக்கு சமனாகிவிடாது.

அன்று, எங்கள் அரசில் பெருந்தோட்ட துறை அமைச்சராக இருந்தவர், நவீன் திஸாநாயக்க. இவருடன் நாம் பலமுறை கட்சி தலைவர்கள் கூட்டங்களில், அமைச்சரவையில் சண்டையிட்டோம். இது இரகசியமல்ல. அனைவரும் அறிந்த பகிரங்க உண்மை.

ஆரம்பத்தில் லக்ஸ்மன் கிரியெல்ல இந்தப் பெருந்தோட்டத் துறை அமைச்சு பதவியில் இருக்கும் போதுதான், எங்கள் கோரிக்கையை ஏற்று, ஏழு பேச் வீட்டுக் காணி திட்டத்தை அமைச்சரவையில் கொண்டு வந்தார்.

ஆனால், திடீரென லக்ஸ்மன் கிரியல்லவை மாற்றி விட்டு, நவீன் திஸாநாயக்கவை, பெருந்தோட்டத் துறை அமைச்சராக ரணில் நியமித்தார். அதன் பின் பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்போது முதல், தோட்டக் காணிகளை,



வீட்டு திட்டங்களுக்கு தர முடியாது என்று எம்முடன் எப்போதும் முரண்பட்டபடியே வந்த நவீன், உழைக்கும் தொழிலாளியின் நலனை விட, எப்போதுமே தோட்ட கம்பனிகளின் நலனையே மேலே தூக்கி வைத்து வந்தார்.

கடைசியில் அமைச்சரவையில் பெரும் சண்டையிட்டு, நிதியமைச்சர் மங்கள சமரவீரவை பிடித்து, முதற்கட்டமாக ரூ. 650 மில்லியன் ஒதுக்கீடு செய்து விட்டோம். அதை தேயிலை சபைக்கு தந்து, அங்கேயுள்ள இன்னொரு ரூ. 650 மில்லியனையும் சேர்த்து, மொத்தம் 1,300 மில்லியன் ரூபாயை, தொழிலாளரின் சம்பள கொடுப்பனவுக்கு ஒதுக்கீடு செய்ய முயன்றோம்.

எல்லாம் கூடி வரும் வேளையில் நவீன் மீண்டும் இதை முடியவே முடியாது என்று தடுத்தார்.

நவீனுக்கு தேயிலை, இறப்பர் தோட்டங்களின் உழைக்கும் தமிழ் தொழிலாளி என்றால் ஏன் இப்படி வெறுப்பு வருகிறது எனப் பகிரங்கமாக நானும், திகாம்பரமும் அமைச்சரவையில் சத்தம் போட்டமை எனக்கு இப்போதும் பசுமையாக ஞாபகம் இருக்கிறது.

நானும், திகாவும் அன்று சண்டையிட்டு அமைச்சரவையிலிருந்து வெளியேற முயல, சக அமைச்சர்களும், ரணிலும் எம்மை பொறுமை காக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அமைச்சரவையில், அன்றைய ஜனாதிபதி மைத்திரி, அமைச்சர்கள் சஜித், மலிக், ராஜித, கிரியல்ல, சம்பிக்க உட்பட பலர் எங்களுக்கு சாதகமாக குரல்கொடுத்தார்கள். ஆனால், பிரதமர் ரணில், நவீன் திஸாநாயக்கவை கண்டித்து, கறாராகப் பேசி, பிரச்சினையை தொழிலாளருக்கு சாதகமாக முடிக்க முன்வரவில்லை.

பிறகு அமைச்சரவை முடிந்து, ரணிலின் அலரி மாளிகை அலுவலகத்துக்குச் சென்றோம். அங்கு நவீன் வருவார் என ரணில் சொன்னார். ஆனால், நாம் நீண்ட நேரம் காத்திருந்தும், நவீன் வரவேயில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் மீது, தமிழ் முற்போக்கு கூட்டணி நம்பிக்கை இழக்க இதுவே ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. ஆகவே, நாம் மலையகத்தைப் பல விடயங்களில் தேசிய அரங்கில் தூக்கி நிறுத்தினோம். சம்பள விடயத்தில் முயற்சி செய்தோம். சண்டையிட்டோம். சரிவரவில்லை. அதற்காக வருந்துகிறோம். ஆனால், அன்றைய தவறு, இன்றைய தவறுக்குச் சமனாகி விடாது.

இன்று கொரோனா காரணத்தைக் காட்டி, ஆயிரம் ரூபாவை நிறுத்த முடியாது. உண்மையில் நாடெங்கும் கொரோனா காரணமாக தரும் நிவாரணம் கூட மலையக தமிழ் மக்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கிறதா? இதுபற்றி நான் கட்சி தலைவர் கூட்டத்தில் உரக்க சொல்லியும், முறைப்படி கிடைக்காமல் ஓரவஞ்சனைதான் நடக்கிறது.

ஆகவே, உண்மையில் இப்போதுதான் கட்டாயம், உறுதியளித்தபடி, அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாய் தேவை – என்று அந்த பேஸ்புக் பதிவில் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஊடகவியலாளர்கள், கலைஞர்களுக்கும் ஐயாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு

ஊரடங்கினால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கான தற்போதைய ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை மேலும் 10 லட்சம் குடும்பங்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் இந்த நிவாரணங் களை பெற்றுக்கொடுக்க அமைச்சரவையில் ஆராயப்படுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விடயங்களை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷதலைமையிலான பொருளாதார மேம்பாட்டு செயலணி மேற்கொள்கின்றது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கே ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikathir
மிருகக் காட்சிசாலை
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது



தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி


இன்று (12/04/2020) தலைப்பு
மிருகக் காட்சிசாலை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623



# கொரோனா வைரஸ் பாதித்த நாடுகளிலிருந்து

# இந்தியா கற்கத் தவறுகின்ற பாடங்கள் என்ன?

ஓர் இந்தியப் பிரஜையின் அவதானிப்பு

இதுவரை எந்த நோயும் கொரோனா அளவு வேகமாகப் பரவியதில்லை. தன் முதல் அலையிலேயே உலகைத் திக்குமுக்காட வைத்திருக்கிறது கொரோனா. தற்போது, கொரோனா தீவிரமாகப் பரவியுள்ள அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகள் எதிலுமே, திடீரென கொரோனா பரவிவிடவில்லை. தன் அண்டை நாடுகள் பாதிக்கப்படுவதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டே, நம் நாட்டிற்கு வரவில்லை என்று அலட்சியமாக இருந்ததன் விளைவாகவே இன்று நோய் பரவியதைத் தடுக்க முடியாமல் அவை திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

கொரோனா பரவலைத் துரிதமாகக் கட்டுப்படுத்திய நாடுகளான சிங்கப்பூர், தென் கொரியா, ஹொங்கொங் ஆகிய நாடுகள் யாவும் இதற்கு முன் இதே போன்ற ஒரு கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட நாடுகள்தான். ஆசியாவிற்கு வெளியே தற்போது மிகவும் மோசமான நிலையில் இருக்கும் நாடுகள் யாவும் இதற்கு முன் இப்படி ஒரு பரவலைப் பெரிதாகக் கண்டதில்லை. மேலும் வைரஸ் பரவினாலும் தங்களால் கட்டுப்படுக்க முடியும் என்ற மெத்தனப் போக்கும், இந்த அளவு வைரஸ் பரவியதற்கு முக்கியக் காரணம்.

**கொரோனா வைரஸ் - அமெரிக்கா**

சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் ஆகியவை 2003இல் சார்ஸ் (ஶ்ரீபுயூறீ) நோய்த் தாக்குதலுக்கு உள்ளானவை. தென் கொரியாவோ 2015 இல்



மெர்ஸ் (MERS) நோய்த் தாக்குதலுக்கு உள்ளானது. அவை வேகமாக விழித்துக்கொண்டு நோய்ப் பரவலை வேகமாகக் கட்டுப்படுத்திவிட்டன.

நோய்ப் பரவலால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடான இத்தாலி நாடு தழுவிய ஊரடங்கை முதலில் ஏற்கவில்லை. நிலைமை தீவிரமாவதை உணர்ந்து பின்னரே செயலாற்றத் தொடங்கியிருந்தனர். மார்ச் 16 இல்தான் பாரிஸ் நகரைத் தனிமைப்படுத்தலாமா என யோசித்துக் கொண்டிருந்தது பிரான்ஸ். ஆனால், அந்த நேரத்திலும் லண்டனில் குதிரைப் பந்தயங்களும், இசை நிகழ்ச்சிகளும் படு ஜோராக நடந்து கொண்டிருந்தன. இதற்கு காரணமாகச் சொல்லப்படுவது, லண்டன் மக்களுக்கு 'ஹெர்ட் இம்மியூனிட்டி' (Herd Immunity) இருப்பதால் கொரோனாவின் தாக்கம் குறைவாகவே இருக்கும் என்ற அரசு மற்றும் மக்களின் எண்ணம்தான். Herd Immunity என்பது இதற்கு முன்னர் ஓர் உடல் எடுத்துக் கொண்ட தடுப்பு மருந்து அல்லது நோய்த் தொற்றின் காரணமாக நம் உடலே நல்ல நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கியிருக்கும். அதனால், புதிய வைரஸ்களை நம் உடலினால் தாங்க முடியும் என்ற நிலை. இந்தக் கதையை மனதில் வைத்துத்தான் பெரிய அளவில் தொற்று ஏற்படாது என மெத்தனம் காட்டியது லண்டன்.

அமெரிக்காவைப் பற்றிக் கூறவே தேவையில்லை. உலக நாட்டுத் தலைவர்கள் சமூக விலகலைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த போதும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மட்டும் சாதாரணமாகவே சுற்றிக்கொண்டிருந்தார். கொரோனா பரவல் தீவிர நிலையை அடைந்து கொண்டிருக்கும்போதே நியூயோர்க் தனிமைப் படுத்துதலுக்கான அறிவிப்பு வருகிறது. விளைவு, கொரோனா பரவலில் 3,30,000 பாதிப்புடன் உலகிலேயே முதல் இடம்.

இந்தியாவைப் பொறுத்தவரை கொரோனா பாதிப்பு 500 க்கும் குறைவாக இருக்கும்போதே நாடு முழுவதுமான ஊரடங்கு என்பது உலக அளவில் பலராலும் வரவேற்கப்பட்ட ஒரு விடயம். மற்ற நாடுகளைப்போல் கொரோனா வந்த பிறகு கட்டுப்படுத்துவது என்பது இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகம் கொண்ட நாட்டில் மிகவும் சிரமமான ஒன்று. எனவே, அந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது. ஆனால், எந்த ஒரு முன்னேற்பாடுகளுமின்றி மிகவும் குறைவான நேரத்தில் அதைச் செயல்படுத்தியது விவாதத்திற்கு உரியது. இதனால், ஒரே நாளில் கொத்துக் கொத்தாக மக்கள் சொந்த ஊர்களுக்குப் படையெடுத்தது தான் மிச்சம்.

இந்தச் சூழ்நிலையில் அரசை மட்டுமே குறைகூற முடியாது. அத்தியாவசியத் தேவை யின்றி யாரும் வெளியேற வேண்டாம் எனக் கூறிய பிறகும், தேவையில்லாமல் வெளியே சுற்றும் மக்கள் எத்தனை பேர்! கொரோனாவிற்கு எதிராக நம் ஒற்றுமையைக் காட்ட கைகளைத் தட்ட வேண்டும் என்பதும், விளக்கேற்ற வேண்டும் என்பதும் எதற்காக எனத் தெரியவில்லை. ஆனால், நாட்டின் பிரதமர் சொல்கிறார். அதை மக்கள் பின்பற்றுகிறார்கள். எந்தக் காரணத்திற்காக இந்த நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்படுகின்றனவோ, அதையே தவிடுபொடியாக்கி விட்டுக் கூட்டம் கூட்டமாகக் கொண்டாட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் என்ன? சிந்திக்காமல் செயலாற்றுவதாக அரசைக் குறை சொல்கிறவர்கள் இருக்கும் அதே நேரம், சிந்திக்காமல் செயலாற்றும் மக்களால்தான் கொரோனா பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

நாம் இப்படி நடமாடுவதும் அறியாமையில் இல்லை. சீனாவில் தானே பரவியுள்ளது என நடமாடினோம், டெல்லியில்தானே பரவியுள்ளது எனப் பேசிக் கொண்டிருந்தோம், ஈரோட்டில்தானே பாதிப்பு அதிகம் என மனதைத் தேற்றிக் கொண்டோம், இதோ இப்போது நம் வீட்டு வாசல் வரை வந்துவிட்டது. இனியும் நாம் மெத்தனமாக இருக்க முடியாது. நாம் இப்போது இருக்கும் மனநிலையானது கடுமையாகப் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் மனநிலைக்குச் சற்றும் சளைத்ததல்ல.

நகர்ப்புறத்தைவிட கிராமப்புறங்களில் நோய் குறித்த சரியான புரிதல் இல்லை. வெளியூரிலிருந்து சமீபத்தில் வீட்டிற்கு வந்தவர்களைக் கணக்கெடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால், அப்படி வெளியூரிலிருந்து வந்த தங்கள் குடும்பத்தினர் குறித்த தெளிவான விவரங்களைப் பலர் அளிப்பதில்லை. எங்களுக்கு எந்த நோயும் இல்லை, இதை மறைப்பதினால் என்னவாகப் போகிறது? என்பதுதான் பலரிடமிருந்தும் பதிலாக வருகிறது. மேலும், இந்தத் தகவல்களைக் கொடுப்பதினால் தங்கள் குடும்பத்தினரைத் தனிமைப் படுத்தி விடுவார்கள் என்றும் அதனால் கொடுக்கவில்லை என்றும் கூறுகின்றனர். இதனால் யாருக்கு பாதிப்பு என்பதைக்கூட அறியாமல் செயல்படுகின்றனர்.

**கொரோனா**

கைதட்டுங்கள் என்று கூறியதற்கு மக்களின் செயல்பாடுகளைப் பார்த்தாவது பிரதமர் புரிந்து கொண்டிருக்க வேண்டும். மீண்டும் வீட்டில் விளக்குகளை ஒளிர விடுங்கள் என அவர், ஒரு அர்த்தத்தில்கூற தீப்பந்தத்தைத் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாக அணிவகுப்பு நடத்தியும், கூட்டம் கூட்டமாக இணைந்து ஒளியெழுப்பியும் ஆரவாரமாகக் கொண்டாடியிருக்கிறார்கள். இது மொத்த ஊரடங்கையும் கேள்விக்குறியாக்குகிறது.

சமீபத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்தியா திரும்பியவர்களின் வீடுகளில், ஸ்டிக்கர் ஒட்டி அடையாளப் படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அது, பொதுவாகச் சமூக விலகலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறது. ஆனால், அவர்களை தீண்டத்தகாதவர்கள் போல பார்க்கும் மனநிலையில்தான் மக்கள் இருக்கின்றனர்.

அரசு எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும், மக்கள் கொடுக்கும் ஒத்துழைப்புதான் முழுமையான பலனைக் கொடுக்கும். மக்கள் எந்த ஒத்துழைப்பையும் கொடுக்காமல் அரசைக் குறை கூறுவது எந்த விதத்திலும் நமக்கு நன்மையைத் தராது.

அத்தியாவசியத் தேவையின்றி வெளியே செல்லாதீர்கள். சமூக விலகலைக் கடைப்பிடியுங்கள், உங்களுக்காக இல்லாவிடினும் உங்களைச் சுற்றி இருப்பவர்களின் நன்மைக்காகக் கடைப்பிடியுங்கள்.

> இதுவரை எந்த நோயும் கொரோனா அளவு வேகமாகப் பரவியதில்லை. தன் முதல் அலையிலேயே உலகைத் திக்குமுக்காட வைத்திருக்கிறது கொரோனா.





பிரேம் குமார் எஸ்.கே.

# ஆண்டுக்கு 30 லட்சம் பாம்புகளை உற்பத்தி செய்த சீனக் கிராமம்

## இப்போது சுருண்டு கிடக்கின்றது

கடந்த 40 வருடங்களாக ஆண்டுக்கு 30 லட்சம் பாம்புகளை உற்பத்தி செய்து வந்த சீன கிராம மக்கள் கலக்கத்தில் உள்ளனர்.

சீனாவில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுக்குள் வந்திருக்கிறது. புதிதாக வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட இல்லை என்னும் நிலை உருவானதால் அங்கு இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட வுகான் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசித்தனர்.

எனினும் குறிப்பிட்ட சில வியங்களுக்கு சீனாவில் தடை தொடர்கிறது. சீனாவில் கொரோனா முதல் முதலாக 'வெட் மார்க்கெட்' என்று அழைக்கப்படும் இறைச்சி சந்தையில் இருந்து பரவியதாக நம்பப்படுகிறது. சில விஞ்ஞானிகள் கொரோனா வைரஸ் வௌவால்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியதாகவும் பாம்புகளிடமிருந்து பரவியதாகவும் சொல்கிறார்கள். எனினும், இதற்கு இன்னும் முழுமையான அறிவியல் ரீதியான முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை.

இந்த நிலையில்தான் சீனாவில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபோது இறைச்சி சந்தைகளும் திறக்கப்பட்டன. ஆனால், பாம்புகளை வளர்க்கும் பண்ணைகளுக்குத் தடை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவில் பாம்பு அதிகம் ரசித்து உண்ணும் உணவு வகைகளில் ஒன்றாகக் கொண்டாடப்படுகிறது. மேலும், உலகம் முழுவதும் மருந்துகளுக்கான தேவை அதிகரிக்க சீனாவில் பாம்புகளுக்கான தேவையும் அதிகரித்தது. இதனால் பாம்பு வளர்ப்பு ஒரு பெரும் தொழிலானது. ஆண்டுக்கு சீனா 9,000 தொன் பாம்புகளை உணவுக்காகவும் மருந்துகளுக்காகவும் இன்ன பிற தேவைகளுக்காகவும் வர்த்தகம் செய்து வந்தது.

இந்தப் பாம்பு வர்த்தகத்துக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது சீனாவின் பாம்பு கிராமம். ஆம், சீனாவில் உள்ள செஜியாங் மாகாணத்தில் இருக்கும் குக்கிராமம்தான் சிசிகியாவ். தோராயமாக 600 பேர் வாழும் இந்தக் கிராமத்தில் மக்களின் பிரதான தொழில் பாம்பு வளர்ப்புதான். இந்த மக்கள் தினமும் கிட்டத்தட்ட



30 லட்சத்துக்கும் அதிகமான பாம்புகளுடன் வாழ்ந்து வருகிறார்கள். இன்று பாம்பு பண்ணைகளாக இந்தக் கிராமம் காட்சி அளித்தாலும், 50 வருடங்களுக்கு முன்பு இந்தப் பகுதி இப்படி இல்லை.

இந்தக் கிராமமே சற்று வறண்ட நிலப்பரப்புதான். இயற்கையாகவே இந்த நிலப்பரப்பில் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாக இருந்திருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் நீர் நிலைகளிலும் பெரும்பாலும் பாம்புகளின் ஆதிக்கம்தான். இதைக் கவனித்த யாங் ஹாங்சாங் என்பவர், இங்கு முதன் முதலாகப் பாம்புகள் பண்ணையை உருவாக்கினார். பின்னாள்களில் இவரை அவ்வூர் மக்கள் பாம்புகளின் ராஜா என்று அழைத்தனர்.

சீனாவில் பசிக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்ட பாம்புகள் இங்குள்ள மக்களுக்குச் செல்வத்தை அள்ளித்தரும் தொழிலாக மாறியது இதன் பின்புதான். அதன் பின்னர், கடந்த 40 ஆண்டுகளில் சிறிது சிறிதாகப் பாம்புப் பண்ணைகள் முளைத்தன. பாம்பு வர்த்தகமும் இங்கு நாளடைவில் அதிக அளவில் பெருகியது. கொடிய நச்சுத்தன்மை உள்ள பாம்புகளில் இருந்து எடுக்கப்படும் விம், அதிகமான விலைக்கு அந்நிய மருந்து உற்பத்தி நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் இந்தக் கிராமத்தில் வீட்டுக்கு வீடு பாம்பு வளர்ப்பு என்பது குடிசைத் தொழிலானது.

நாளடைவில் மருந்துகளின் தேவை அதிகரித்ததால், இந்தக் கிராம மக்களின் வளர்ப்புப் பாம்புகளின் தேவையும் பன்மடங்கு அதிகரித்து. இதனால் பாம்புகளின் விற்பனை தொன் கணக்கில் நடந்தது. சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கத்தைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் பாம்புகள் உள்ளிட்ட அனைத்து விதமான இறைச்சிகளுக்கும் தடை வித்தது.



தற்போது நிலைமை சீரடைந்து வருவதால் பாம்புப் பண்ணைகள் மீது இருந்த தடை விலகும் என நினைத்திருந்தனர். ஆனால், பாம்புகள் பண்ணைக்கும் அதன் உற்பத்திக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது, இந்தக் கிராம மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. "இங்கு இருக்கும் மக்கள் வேறு தொழிலுக்கு மாற வேண்டும். அவர்கள் வேறு விதமான உயிரினங்களை வளர்க்கலாம் என உள்ளூர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனால், இது தற்காலிகத் தடைதான் எனக் கிராம மக்கள் நம்பி காத்திருக்கின்றனர். எனினும், இந்தத் தடை நிரந்தரமானது எனச் சில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



பாம்புகள் அடைக்கப்பட்டிருக்கும் கூடுகள் காலியாக உள்ளன. ஏற்கெனவே 2002 ஆம் ஆண்டு சீனாவில் பரவிய சார்ஸ் வைரஸுக்கும் அந்நாட்டில் இயங்கி வரும் இறைச்சி சந்தையே காரணமாகச் சொல்லப்பட்டது.

தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனா வைரஸும் வௌவால் அல்லது ஊர்வன விலங்குகளின் இறைச்சியிலிருந்துதான் பரவியதாக நம்பப்படுகிறது. இதனால்தான் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் கடந்த 40 வருடங்களாக ஆண்டுக்கு 30 லட்சம் பாம்புகளை உற்பத்தி செய்து வந்த மக்கள் கலக்கத்தில் உள்ளனர்.

# கொரோனா தரும் மன அழுத்தம்; அதில் இருந்து மீள்வது எப்படி?

கொரோனா தரும் மன அழுத்தத்தில் இருந்து மீள்வது எப்படி? என்று மருத்துவ நிபுணர்கள் விளக்கம் அளித்து உள்ளனர்.

கொரோனாத் தொற்று தடுப்பு எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்று தொற்று தாக்கிய காலங்களில் மனநலம் பேணுவதும் மிக முக்கிய



மானதாகும். ஏனெனில் நோய்த் தொற்றுத் தாக்குதலில் இருந்து விடுபடுவதற்கு தனிமைப்படுத்துதல் அவசியமாகி விடுகிறது.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பிறரிடம் தொடர்பு இல்லாமல் இருப்பதால் மனசோர்வு நோய்க்கு ஆளாக வாய்ப்பு உள்ளது. எதிர்கொள்ள இருக்கும் நிச்சயமற்ற காலத்தை நினைக்கும்போது மனஅழுத்தம் ஏற்படும். வீட்டில் அவர்கள் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருள்கள் தீர்ந்துவிடும் நிலையில் உதவி செய்ய ஆள் இல்லாதபோது மனம் பதற்றமடையும்.

கை கழுவுதல், சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு செயல் ஆகியவற்றை சரிவர செய்தோமா? முகக் கவசம் சரியாக அணிந்தோமா? போன்ற சந்தேகங்கள் வருவதால் திரும்ப, திரும்ப அந்த வேலைகளை செய்ய முற்படுவதுண்டு. தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதால் பிற உறவினர்களைச் சந்திக்க இயலாதபோது, அவர்களுடைய ஆலோசனைகளை பெற இயலாததால் மனகுழப்பத்திற்கு ஆளாக நேரிடும். இது தீவிரமடையும் போது தற் கொலை எண்ணங்



கள் மேலோங்கும்.



இயல்பாக தும்மலோ, இருமலோ, மூக்கில் பசபசப்போ வெளிப்பட்டால் இது கொரோனாவின் அறிகுறி என்று அச்சப்படும் நிலை ஏற்படும். விடுமுறை காலங்களில் இணையதள பயன்பாட்டையே நம்பி இருப்பதால் அதிலிருந்து விடுபட முடியாமலும், அதற்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையும் ஏற்படும். பேரிடர் நீங்கி, சமூக அமைதி திரும்பிய பின்னரும், பேரிடர் காலத்தில் கடந்து வந்த எதிர்மறை சம்பவங்களின் பிரதிபலிப்பாக மன அழுத்தம், தூக்கமின்மை போன்ற பிரச்சினைகள் உருவாகும்.

அரசு சொல்கிற தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி மன அமைதியுடன் இருப்பதற்கு கொரோனா பற்றிய செய்திகளை அறிய நம்பகமான வழிகளை மட்டுமே பயன்படுத்தவேண்டும். அந்தச் செய்திகளைக் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளுடன் உள் விளையாட்டுகள், பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடுங்கள். குடும்பத்தோடு செலவிட உகந்த காலமாக இந்த நாள்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பண்பாடு சார்ந்த புத்தகங்கள், நீதி நெறி, நாளிதழ் மற்றும் உங்களை கவர்ந்த புத்தகங்களை வாசிக்கலாம். அவற்றை வாசித்ததை குடும்பத்தினருடன் பகிர்ந்து விவாதிக்க வேண்டும். உங்கள் குழந்தை பருவ அனுபவங்களை வீட்டில் உள்ள உங்களது பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். உடற்பயிற்சி, யோகா ஆகியவற்றை தினமும் செய்யவேண்டும்.

தியானம், வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை செய்து குடும்பத்தினருடன் இணைந்து இருக்க வேண்டும். குடும்பத்தோடு செலவிடக்கூடிய காலத்தை பொன்னான காலம் என்று கருதுங்கள். மன உளைச்சல் மிகுந்த காலங்களில் இதுவும் கடந்து போகும் என்ற எண்ணத்தை மேலோங்க செய்ய வேண்டும். மெல்லிய இசை, ஊக்கம் தரும் பாடல்கள், நல்ல புத்தகங்கள் ஆகியவற்றை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

யோகா நித்ரா போன்ற தளர்வு பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். இந்த காலத்தில் மன வலிமை மிகவும் தேவை. மேலும் சீரிய சிந்தனை திறன், பிரச்சினைகளை சமாளிக்கும் திறன் போன்றவைகளை வளர்த்துக்கொள்ளவேண்டும். எந்தச் செயலை செய்ய முற்படும்போதும் என்னால் முடியும் என்ற உணர்வோடு செய்யத் தொடங்கவேண்டும். இவ்வாறு செய்வதனால் கொரோனா தரும் மனஅழுத்தத்தில் இருந்து மீளலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அண்டார்டிகாவில் நடமாடிய டைனோசர்கள்





மேற்கு அண்டார்டிகாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் 9 கோடிஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதியில் டைனோசர்கள் நடமாடியமை தெரியவந்துள்ளது. ஜேர்மனியின் ஆல்ஃப்ரெட் வேகனார் கல்வி நிலையம் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவானது நேச்சர் சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. அண்டார்டிகா கண்டமானது 90 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இப்போது உள்ளது போலப் பனிப் பிரதேசமாக இல்லாமல் அடர்ந்த காடாக இருந்துள்ளது. அந்த காடுகளில் டைனோசர் உலவி இருந்திருக்கின்றன ஐரோப்பாவின் சில பகுதிகளில் இப்போது நிலவும் வெப்ப நிலையில் அப்போது அண்டார்டிகா இருந்துள்ளது என்கிறது அந்த ஆய்வு.



ஹெலென் பிரிக்ஸ்
(பிபிசி அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் செய்தியாளர்)

# அழிவின் விளிம்பில் லெதர்பேக் ஆமைகள் இந்த இனத்தை காப்பாற்ற முடியுமா?

கடலில் இருப்பதிலேயே மிகப்பெரிய ஆமைகள் இவைதான். கடினமான ரப்பர் போன்ற தோல் இருப்பதன் காரணமாக அவை லெதர் பேக் ஆமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

ஓராண்டில் நீண்ட தூரம் பயணித்து இடம் பெயரும் இந்த ஆமைகளால், பசிபிக் பெருங் கடலையும் கடக்க முடியும்.

ஆனால் மீன்பிடி வலைகள் அல்லது தூண்டில்களில் மாட்டிக்கொள்வது போன்ற அச்சுறுத்தலால், இந்த அரிய வகை உயிரினம் தற்போது அழியும் நிலையில் உள்ளதாக இயற்கை வளப் பாதுகாவலர்கள் கூறுகின்றனர்.

இதே சூழல் நீடித்தால், அழிவின் விளிம்பில் இருக்கும் இந்த லெதர்பேக் ஆமைகள் 60 ஆண்டுகளில் இல்லாமல் போய்விடும்.

இவற்றைக் காப்பாற்ற இன்னும் 10 ஆண்டுகளே உள்ளன. அதற்குள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும் என்று எவ்.எவ்.ஐ. என்றழைக்கப்படும் ஃப்ளோரா மற்றும் ஃபானா (ய்ழிற்ஜழி & ய்பிலிஷழி) சர்வதேச அமைப்பு உட்பட பல கடல் வள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த உயிரினத்தை நம்மால் பாதுகாக்க முடியும். இவற்றைப் பெருக்கம் செய்ய முடியும். ஆனால், அதற்கு அனைவரும் ஒன்றாக சேர்ந்து போராட வேண்டும் என்கிறார் அமெரிக்கன் மற்றும் கிரபியன் பகுதி எவ். எவ். ஐயின் திட்ட இயக்குநர் ஆலிசன் கன்.



இந்த லெதர்பேக் ஆமைகள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்கின்றன. அவை ஒரே இனமாக இருந்தாலும், வெவ்வேறு கடல்பகுதியிலும் வாழும் இந்த ஆமைகளின் இனப்பெருக்க முறை வித்தியாசமானதாகும். பசுபிக் கடலில் வாழும் லெதர்பேக் ஆமைகள், அழியும் ஆபத் தில் இருக்கின்றன. இந் நிலையில், கிழக்கு மற்றும் மேற்கு பசுபிக் கடல்களில் இருக்கும் ஆமைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

கிழக்கு பசிபிக் கடலில் இருக்கும் ஆமைகள்பெரும்பாலும், மெக்ஸிகோ மற்றும் கோஸ்டாரிகா கடற்கரைளில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும். அதே போல பனாமா மற்றும் நிகரகுவா பகுதியிலும் இவை முட்டையிடுவது வழக்கம்.

ஆனால், கடந்த 3 தலைமுறைகளாக, பெண் ஆமைகள் இங்கே வந்து முட்டையிடுவது 90 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்துள்ளது.

இந்த குறிப்பிட்ட வகை ஆமைகள் அழிந்தால் இவற்றுக்கு மாற்று என எதுவும் கிடையாது. ஏனெனில், இந்த குறிப்பிட்ட கடல்பகுதிக்கு இவை தனித்துவம் வாய்ந்தவையாகும் என்கிறார் ஆலிசன் கன்.

இப்போது கடல் வளங்களை காக்க நிறைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் இந்த உயிரினங்களை பாதுகாப்பதையும் நாம் உறுதிசெய்ய வேண்டும் என்று ஆலிசன் கூறுகிறார்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

இயற்கை வள ஆர்வலர்கள் இந்த வகை ஆமைகளைக் காக்கும் முயற்சியில் விரைவாக ஈடுபட்டு அதற்கான நடவடிக்கையை விரைவில் எடுத்தால் கிழக்கு பசிபிக் கடலில் வாழும் லெதர் பேக் ஆமைகளின் எண்ணிக்கையை பெருக்க முடியும்.

அதற்கு அடுத்த 10 வருடங்களில் இரண்டு வியங்கள் செய்ய வேண்டும்:

மீன்பிடி வலைகளில் மாட்டிக்கொள்வதால் ஓராண்டில் 200ல் இருந்து 260 லெதர்பேக் ஆமைகள் இறக்கின்றன. அதனை தவிர்க்க வேண்டும்.

ஓர் ஆண்டிற்கு 7000 - 8000 வரையிலான குஞ்சுகள் அடைகாக்கும் கூடுகள் அமைப்பதன் மூலம் அவற்றைப் பாதுகாக்கலாம்.

கடல் ஆமைகளில் மிகவும் பெரியதான லெதர்பேக் ஆமைகள், 900 கிலோ எடை கொண்டவையாகும். அதன் நீளம் ஆறு அடி.

கிழக்கு பசிபிக் கடலில் இருக்கும் இந்த லெதர்பேக் ஆமைகள், 1980களில் இருந்து, 90 சதவீதம் குறைந்துள்ளது. இதனால் சர்வ தேச இயற்கை வள பாதுகாப்பு அமைப்பின் அழியும் நிலையில் இருக்கும் உயிரினங்களின் சிவப்புப் பட்டியிலில் இவை இடம்பெற்றுள்ளன.

> கிழக்கு பசிபிக் கடலில் இருக்கும் இந்த லெதர்பேக் ஆமைகள், 1980களில் இருந்து, 90 சதவீதம் குறைந்துள்ளது. இதனால் சர்வதேச இயற்கை வள பாதுகாப்பு அமைப்பின் அழியும் நிலையில் இருக்கும் உயிரினங்களின் சிவப்புப் பட்டியிலில் இவை இடம்பெற்றுள்ளன.

# பிரிட்டனில் 5,000 ஆண்டுக்கு முந்தைய நெருப்புக்கோழி முட்டைகள்

லண்டனின் பிரிட்டிஷ் அருங்காட்சியத்தில் இருக்கும் நெருப்புக்கோழி முட்டைகள் குறித்த மர்மத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர்.

பிரிட்டிஷ் அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும் சில நெருப்புக்கோழி முட்டைகள் இத்தாலியில் கண்டெடுக்கப்பட்டவை. ஆனால், நெருப்புக்கோழிகள் ஐரோப்பிய கண்டத்தை சேர்ந்தவை அல்ல என்பதால், அந்த முட்டைகள் உண்மையில் எந்தப் பகுதியை சேர்ந்தவை என்பது மர்மமாகவே இருந்தது.



தற்போது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் சர்வதேச குழு, அந்த நெருப்புக்கோழி முட்டைகள் பற்றிய வரலாற்றைக் கண்டறிந்துள்ளனர்.

5000 ஆண்டுகளுக்கு முன், வெண்கல மற்றும் இரும்பு யுகங்களில் ஐரோப்பா, மத்திய தரைக்கடல், மற்றும் வட ஆப்பிரிக்கா முழுவதும் மக்கள் நெருப்புக்கோழி முட்டைகளை வர்த்தம் செய்தமை தெரிய வந்துள்ளது.

பணக்கார நபர்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்கு அருகில் இதுபோன்ற முட்டைகள் கண்டெடுக்கப்படுவதால், அலங்கரிக்கப்பட்ட நெருப்புக்கோழி முட்டைகள் ஆடம்பரப் பொருள்களாக இருந்திருக்கலாம் என்கிறார் இந்த ஆராய்ச்சி திட்டத்துக்குத் தலைமை தாங்கும் டாமர் ஹோடொஸ்.

அதே போல அவை காட்டில் வாழ்ந்த நெருப்புக்கோழிகளா அல்லது மனிதர்களால் வளர்க்கப்பட்டவையா என்பதை கண்டறிவதிலும் ஹோடொஸின் குழு ஆர்வமாக இருந்தது.

நெருப்புக்கோழிகள் மிகவும் ஆபத்தானவை என்பதால், அவற்றை பிடிப்பது என்பது மிக்கடினம்.

எனினும், தற்காலத்தில் எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன், துருக்கி ஆகிய நாடுகளில் இருக்கும் நெருப்புக்கோழி முட்டைகளின் வேதியியல் கூறுகளை வைத்து பழைய முட்டை ஓடுகளை ஒப்பிட்டு அதன் வரலாற்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

அவ்வாறு ஆய்வு செய்ததில் தற்போது அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும் முட்டைகள், வடக்கு எகிப்து மற்றும் கிழக்கு மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் (ஜோர்டன், சிரியா மற்றும் துருக்கி உட்பட) வர்த்தகம் செய்யப்பட்டிருக்கலாம் என்பது தெரிய வந்துள்ளது.

அதோடு அவை காட்டில் வாழ்ந்த நெருப்புக்கோழிகளின் முட்டைகள் என்றும் அதனை எடுக்க வர்த்தகர்கள் பெரிய அபாயங்களைச் சந்தித்திருக்கலாம் என்றும் ஹோடொஸின் ஆய்வு கூறுகிறது.

முட்டைகளை எடுப்பது மிகவும் ஆபத்தானது. நெருப்புக் கோழிகள் மிகவும் ஆபத்தானவை. முதலில் அதன் முட்டைகள் எங்கிருக்கிறது என்பதை கண்டறிய வேண்டும். பின்னர் அவற்றை திருட வேண்டும், என்கிறார் ஹோடொஸ்.



லண்டனின் பிரிட்டிஷ் அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும் நெருப்புக்கோழி முட்டைகள்.

# கல்வித்துறையில் மேலும் வலுவான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும்

## கல்வி அமைச்சிற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.12

வைரஸ் பரவல் காரணமாக பாதிப்பிற்குள்ளாகியுள்ள கல்வித்துறை தொடர்பில் அரசாங்கத்தால் மேலும் வலுவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சை என்பவற்றை நடத்துவது தொடர்பிலும் ஆராய வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கல்வித்துறையும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக் கழக மாணவர்கள் வரை அனைவர் தொடர்பிலும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்காகக் கல்விமான்களின் கல்வித்துறைசார் அதிகாரிகளின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சைகள் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் தற்போதைய சூழல் எப்போது நிறைவடையும் என்பது தொடர்பில் யாராலும் உறுதியாகக் கூற முடியாது.

இம்மாத இறுதியில் கல்வி நடவடிக்கைளை ஆரம்பிக்க முடியும் என்று நாம் எண்ணவில்லை. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது இறுதித் தவணையை நிறைவு செய்திருக்க வேண்டும். இவ்வாறான விடயங்களை கருத்திக் கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும்.

அத்தோடு விடுமுறை தினங்களில் மாணவர்கள் தவறான பாதையில் சென்றுவிடாது கல்வி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயற்படுவதற்கான வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.– என்றார்.

# போதை பொருள் தொடர்பான சிறிய குற்ற சந்தேக நபர்களுக்கும் பிணை வழங்கப்படும்

போதை பொருள் தொடர்பான சிறிய குற்றங்களை இழைத்த கைதிகளை பிணையில் விடுதலை செய்வதற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தக் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான வழிமுறைகள் அடங்கிய கடிதத்தை சட்டமா அதிபர் தப்புல டி லிவேர, பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி இருந்தார்.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் சிறைச்சாலைகளில் உள்ள - போதை பொருள் சம்பந்தமான சிறு குற்றங்களில் ஈடுபட்ட - கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு அண்மையில் ஜனாதிபதி செயலாளர் சட்டமா அதிபரைக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

அதற்கமைய 2 கிராமுக்கும் குறைந்த அல்லது அதற்கும் மேற்படாத ஹெரோயின் போதை பொருள் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்குப் பிணை வழங்குமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஹெரோயின் மொத்த எடை 10 முதல் 20 கிராம் வரை இருக்கும் போது 3 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் விளக்கமறியலில் இருந்த சந்தேக நபர்கள் மற்றும் அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், 5 முதல் 10 கிராம் எடையுள்ள ஹெரோயின் போதை பொருள் வழக்குடன் தொடர்புடையவர்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக விளக்கமறியலில் இருந்தால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதற்கு தகுதியானவர்கள்.

அத்துடன் ஹெரோயின் போதை பொருளின் மொத்த எடை 5 கிராமுக்கு குறைவாக இருக்கும் போது சிறைத் தண்டனை பொருந்தாது, மேலும் ஒன்று முதல் இரண்டு கிராமுக்கு மேல் மற்றும் 3 மாதங்களுக்கும் குறைவாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும் பிணை வழங்கல் செல்லுபடியாகும்.

ஹெரோயின் போதை பொருளின் எடை ஒரு கிராமுக்கு குறைவாக இருந்தால் அவருக்கு பிணை வழங்க வாய்ப்புள்ளதாக சட்டமா அதிபர் பொலிஸாரை தெளிவுப்படுத்தியுள்ளார்.

மேலும், 5 கிலோகிராம் கஞ்சா போதை பொருளுடன் கைது செய்யப்பட்டு ஒரு மாதத்திற்கும் மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கும், 5 கிலோ கிராம் கஞ்சா போதை பொருளுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கும் பிணை வழங்க அனுமதியுண்டு.

# ஜனாதிபதியைப் பாராட்டி சபாநாயகர் கரு கடிதம்



கொரோனா வைரஸை ஒழிக்க அரசாங்கம் எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளையும் தாம் வரவேற்கிறார் என சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விற்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பித் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார் சபாநாயகர்.

அபிவிருத்தி செயற்பாடுகளை ஒத்தி வைத்துகொவிட்19எனப்படும்கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்கும் போது சுகாதார துறையினரும், பாதுகாப்பு பிரிவினரும் செயற்படும் விதம் தொடர்பில் மகிழ்ச்சியடைவதாகவும் அவர்களின் சேவையை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.


20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576
சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.04.2020 இல் வெளியிடப்பெற்றது.